1267 7



OFFICE OF THE ... MADRAS
29 AUG 1935

# "சித்தன்"

## ஓர் மாதாந்தப் பத்திரிகை.

| மாலை 1. | ஆகஸ்டு 35. | மணி 8. |
|---|---|---|
| Vol. 1. | August 35. | No. 8. |

உள்ளுரை. பக்கம்.


1. இந்தியக்கைத்தொழில் ... .... 247
2. நட்பு ... ... 251
3. செய்யுள் பகுதி ... ... 253
4. மாம்பழக்கவிச்சிங்கநாவலரவர்கள் ... 255
5. தங்கச்சங்கிலி ... ... 260
6. பழனிப்பதியும் பாவலர்மகிமையும்.... 267
7. கல்வி பரப்புவதற்கேற்றவழி .... 271
8. நவீன அகராதி ... ... 273
9. விவாகரத்து ... .... 275
10. விதவைபர்களின் வேண்டுதல் ... 278
11. சகோதரி உனக்கி... ... ... 279
12. ... தாதுமபாத்... ... ... 282
... பகுதி... ... ... 283
... கி ... ... 285
... .... ... 287


JL
ஊ211, N35CN
N35.1.8.
18921

ஆசிரியர் C. P. சாமி.

# "சித்தன்"

## ஓர் மாதாந்தப் பத்திரிகை.

கல்வி, கைத்தொழில், வியாபாரம், விவசாயம், வைத்தியம், சுகாதாரம் முதலிய அரிய கட்டுரைகளுடனும், தமிழ் வைத்தியர்கட்கு பெரிதும் பயன்படும் விஷயங்களுடனும் ஆங்கிலத் திங்கள் தோறும் பழனியினின்றும் வெளிவருகிறது.

---

### சந்தா விபரம்.

| | | | |
|---|---|---|---|
| வருடம் 1-க்கு உள் நாடு | ... | ரூ. | 0—8—0. |
| ,, வெளி நாடு | ... | ரூ. | 1—0—0. |
| தனிப்பிரதி | ... | ரூ. | 0—1—0. |

சந்தாத்தொகையை முன்னுடியே செலுத்திவிடவேண்டும். வி. பி. யில் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. எப்போது சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அவ்வருட ஜனவரி மீ-முதல் கணக்கு வைக்கப்பட்டு, ஜனவரி-மீ சஞ்சிகை முதல் பத்திரிகை அனுப்பப்படும். பதில் விரும்புவோர் தபால் முத்திரை அனுப்பவேண்டும்.

---

### விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| ஒரு தடவைக்கு முழுப்பக்கம் | ரூ. | 5—0—0, |
| ,, அரைப்பக்கம் | ரூ. | 3—0—0. |
| ,, கால்பக்கம் | ரூ. | 1—8—0. |

N. B:— நீடித்து விளம்பரஞ்செய்வோர் எமக்கெழுதித் தெரிந்துகொள்ளவும்.

விலாசம்:— மானேஜர்,

சித்தன்,

பழனி. S. I.

# "சித்தன்"
## பழனி.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்"

**மாதாந்தப் பத்திரிகை.**

ஆசிரியர்— C. P. சாமி.

| மாலை 1. | ஆகஸ்டு. 1935 | மணி 8. |
|---|---|---|

# இந்தியக் கைத்தொழில்.

உலகத்திலுள்ள எத்தொழிலிலும் சிறந்தது கைத்தொழில். கைத்தொழில் என்பது கையினால் செய்யப்படும் தொழில் எனப்பொருள்பெறும். ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு முக்கியமானது வியாபாரமும் விவசாயமுமே. வியாபாரத்திற்கு விவசாயப் பொருள்களும், கைத்தொழில் பொருள்களும் வேண்டியிருக்கின்றன. நம் வாழ்க்கைக்கு வேண்டிய உணவுப்பொருளைப் பெறுதற்கு உழவுத்தொழிலைச்செய்கிறோம். அவ்வுழவுத் தொழிலுக்கு வேண்டியவர், கலப்பை முதலிய விவசாயக் கருவிகள் எங்கிருந்து கிடைக்கின்றன? மக்களின் கைமுயற்சியினாலன்றோ!

டையை நெசவுத்தொழிலிலிருந்து பெறுகிறோம். நெசக்கருவிகள் கைத்தொழிலாலன்றிக் கிடைக்குமா? இன்வும் உலகத்திலுள்ள எத்தனையோ வகையான பொருள்களைப் பெறவேண்டுமானாலும் பல கருவிப்பொருள்கள் வேண்டுமன்றோ! அவைகளும் கைத்தொழிலால்தானே கிடைக்கின்றன.

நம் நாட்டிலிருந்த புராதன காலத்து கைத்தொழிலையும் மற்ற இதர வேலைகளையும் ஆராயப்புகுந்தால் நாம் வியப்புறாமலிருக்கமுடியாது. நம் முன்னோரின் சிற்பத்திறத்தை அறிய புராதனக் கோவில்களிலுள்ள சிற்ப வேலைகளே போதிய சான்றாகும். நெசவுத் தொழிலைப்பற்றி எடுத்துக்கொண்டால் அக்காலத்து டக்கா மஸ்லின் சிறந்ததாயிருந்ததென்று கேள்விப்படுகிறோம். இவ்வாறே தந்தத்தினால் செய்யப்பட்ட அற்புத வேலைகள் யாவரும் பிரமிக்கும்படியிருந்தது. வைத்தியத்தொழிலை கவனித்தால் ஆபத்தான கொடிய வியாதிகளையும் அதிவிரைவில் குணப்படுத்தத்தக்க மருந்துகளையே கையாடிவந்தனர். எல்லாத் தொழில்களும் அன்னியநாட்டினரால் ஆச்சரியப்படத்தக்க நிலையில் இருந்தது எனவறிகிறோம். இந்திய சரித்திரத்தைப் படிப்போமானால் ஆரிய திராவிடர்கள் நாகரீமாக இருந்ததற்குக் காரணம் கைத்தொழிலே எனத்தெரியவருகிறது. அக்காலத்தில் நம் நாட்டிலிருந்து அன்னிய நாட்டிற்கு கையினால் செய்யப்பட்ட சாமான்கள் ஏற்றுமதியானதினால் மக்கள் அனைவரும் வறுமை என்னும் பிணியை அனுபவிக்காமலிருந்தார்களென அறிகிறோம். தற்போதோ உண்ணப் போதிய உணவும் உடுக்கப்போதிய உடையுமின்றி இந்நாட்டில் பல்லாயிரம் மக்கள் பட்டினி கிடந்து பரிதவிக்கின்றார்களன்றோ! இப்பரிதாபம் நீங்க கைத்தொழிலை ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் விருத்தி செய்யவேண்டியது அவசியமாகும். அதுவும் தான் உண்டாக்குகிற சரக்குகள்

உயர்ந்த தரமாகஇருக்கும்படி ஜாக்கிரதை எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் "இந்தியாவில் செய்யப்பட்டது" என்று சீட்டு ஒட்டப்பட்ட தன்னுடைய சரக்குகள் வாங்குகிறவனுக்கு அதிர்ப்தியை உண்டாக்கினால் நாளடைவில் கைத்தொழிலின் அபிவிருத்தி குறையநேரிடும். மிகவும் உயர்ந்தசரக்குகளை நம்நாட்டில் செய்யக்கூடும் என்பதற்குப் போதியஅத்தாட்சிகள் இருக்கிறபடியால்நயம்சரக்குகளையே உண்டாக்க முயலவேண்டும்.

இல்லறத்திற்குரிய சாமான்களை சுளுவான விலையில் செய்து அன்னியநாட்டு சாமான்களோடு போட்டி போடத் தக்கதாய் அமைக்கவேண்டும். சீக்கிரம் லாபம் சம்பாதிக்க வேண்டுமென்ற ஆசையினால் செய்பாகமில்லாமலும் உபயோகமற்ற சாமான்களைக்கொண்டும் செய்யப்பட்ட சரக்குகளை தேசத்தில் விற்கிறவன் இந்தியாவின் அபிவிருத்திக்கு பங்கம் விளைவிப்பவனாகிறான். ஆதலால் உயர்ந்த சாமான்களையே தயாரிக்கவேண்டும்.

சுதேசாபிமானம் என்பது கைத்தொழிலாளியிடத்தில் இருப்பதுபோல சரக்கு வாங்குவோரிடத்திலும் இருக்க வேண்டும். சரக்கு நயமாயிருந்தாலும் அதை தன் சுதேசத்திலுண்டான காரணத்தைக்கொண்டு அலட்சியம் செய்து அன்னிய தேச சாமான்களில் மோகம் உள்ளவர்களாய் சரக்கு வாங்குவோரில் பலர் இருக்கிறார்கள். அன்னியதேச சாமான்கள் தம்மிடமிருப்பதால் தம்மை ஒரு நாகரீகமுள்ளவராக பிறர் எண்ணுவாரென்றும், அதில் தமக்கு ஒரு கௌரவம் இருக்கிறதென்றும நினைத்துக்கொண்டு அப்படிப்பட்ட சாமான்களிடத்தில் பிரியம் காட்டுகின்றனர்.

அவர்களைத் திருத்தவேண்டியது சுதேசாபிமானமுள்ளவர்களின் கடமையேயாகும்.

அன்னியநாட்டிலிருந்து போட்டியாய்க் கொண்டுவரப் பட்டிருக்கிற சாமானைப்போலவே அவ்வளவு குணமுள்ள தாய் இந்தியாவிற் செய்யப்படும் சாமான்களிருந்தால் அதை வாங்குகிற இந்தியன் தன்னுடைய நாட்டிற்கும் தனக்கும் நன்மை தேடுபவனாகிறான்.

நம் இளைஞர்களுக்குப் போதிக்கப்படும் கல்வி விஷயத்தைஆராய்ந்துபார்த்தால் அது பிரயோஜனமற்றதா யிருக்கிறது. இக் கல்வியால் தற்போது நம் நாட்டில் வேலை யற்றுத்தவிக்கும் வாலிபர்களது எண்ணிக்கை அதிகரிக் குமேயொழிய குறையக்காரணமில்லை. கைத்தொழிலற்ற வெறும்படிப்பால் தற்காலம் வறுமையில் வாடிநிற்கும் நம் நாட்டிற்கு ஒருசிறிதும் பயனில்லை. இங்கிலாந்தில் ஒரு வனது சராசரி வருமானம் இரண்டு பவுனாக இருக்கும் போது இந்தியாவிலோ ஒருவனது சராசரி வருமானம் இரண்டணாவாக இருக்கிறது. பொருளாதார நிலைமையில் நம்நாடு அடைந்திருக்கும் நிலைமை மிக வருந்தத்தக்கது. இதற்குக் காரணமென்ன? கைத்தொழில் க்ஷீண திசை யடைந்ததாலன்றோ! கைத்தொழில் முன்னேற்றமடையாத தால் நமக்குவேண்டிய சாமான்களைப் பிறநாடுகளிலிருந்து எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது. இதனால் நம் நாட்டு இயற் கைச் செல்வங்களாகிய பொன், வெள்ளி, முதலிய உலோகங் களையும் வைரம் முதலிய நவமணிகளையும் ஈடாகத்தந் தன்றோ பெறவேண்டியிருக்கிறது. இதனால் நம் நாடு தாழ் நிலையையன்றோ அடைய நேரிடுகிறது.

"குந்தித்தின்றாற் குன்றுங் குறையும்" என்ற முதி யோர் சொல்படி நம் நாட்டுச் செல்வங்களனைத்தும் பிறநாடு செல்வதால் நம் நாடு தரித்திர திசையை அடையவேண்டி வருகிறது. ஆதலால் நம்நாட்டு இயற்கைச்செல்வங்கள் போனதுபோக இருப்பதையாகிலும் இனி நிலைத்துநிற்கு மாறு கைத்தொழிலைப்புரிந்து தாய் நாடு வறுமையுறாதபடி செய்து பாரதநாட்டைக் காப்பாற்றுவோமாக.

ஆசிரியன்.

# நட்பு.

"செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு".

நட்பைப்போல் சம்பாதித்தற்கரிய பொருள் எவை இருக்கின்றன? இல்லவே இல்லை. நட்பு, சிநேகம், நேசம், அன்பு, பழக்கம் என்பவைகள் ஒரு பொருள் தரும் சொற்கள். நட்பானது மனிதருக்கு இயற்கையாகவே அமையும் ஓர் விசேட குணம். இக்குணம் பறவை, மிருகம் இவைகளிடத்தும் உண்டாகும் தன்மை வாய்ந்தது. ஒருவன் தன் உயிர்த்தோழனிடம் காட்டும் அன்பிற்கு தோழமை அல்லது சிநேகம் என்றும், மனைவி தன் கணவனிடம காட்டும் அன்பிற்கு காதல் என்றும், தாய் தன் பிள்ளையிடம் காட்டும் அன்பிற்கு வாஞ்சை என்றும், மாணுக்கன் தன் குருவினிடம் செலுத்தும் அன்பிற்கு பக்தி என்றும், குடிகள் அரசனிடம் செலுத்தும் அன்பிற்கு ராஜ விசுவாசம் என்றும் கூறுகிறோம். ஆகவே மேற்கூறப்பட்டவர்கள் செலுத்தும் அன்பானது நட்பு என்னும் அரிய குணத்தால் ஆகியது.

நட்புக்கொள்வது நட்பாளர் ஒருவர் கெட்ட வழியில் செல்லுங்கால் நல்லறிவைப்புகட்டி அதனின்றும் விலக்குதற்காம் தேமுகமட்டும் பேசுபவர் நட்பு நன்மை தராது.

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு"

என்றபடி அகமலர்ந்து சிநேகிக்கும் சிநேகமானது அழியாது ஓங்கி வளரும். இக்கருத்தைக்கொண்டே இராமலிங்க சுவாமிகளும்

"உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகலவாமை வேண்டும்" என்று கூறியுள்ளார்கள்

ஆதலால் ஒருவருடன் நட்புக்கொள்ளுமுன் அவர் குணங்களைப் பரீக்ஷித்து தம்மின் ஒத்தாரோடு இணங்க வேண்டும். ஆராய்ந்துகொள்ளாத நேசம் எலியும் தவளையும் கொண்ட நேசத்தை ஒக்கும்.

எவ்வாறு ஒருவனின் வஸ்திரம் அவனையறியாமலே அவிழ்ந்துவிடுமானால் அவனின் கைகள் அதைத்தளரவிடாமல் தடுக்கின்றதோ அவ்வாறே தனது சிநேகனுக்கு இடுக்கண் உற்றகாலையில் அதனின்றும் அவனைக்காப்பாற்றுபவனே உத்தம தோழன் என்பதை

"உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

என்று திருவள்ளுவரும் கூறியுள்ளார்.

தண்ணீர்கலந்த பாலை அடுப்பிலேற்றிக் காய்ச்சுவோமானால் தன்னோடு கலந்த தண்ணீர் தன்னை விட்டி நீங்கப் பொறாது பொங்கி நெருப்பைத்தணிக்க வெளிவருகிறது. அச்சமயம் சிறிது தண்ணீரை விட்டால் உடனே தன் நேயன் வந்தானென்று உள்ளடங்குகிறது. அதுபோல நேயனுக்கு கஷ்டம் உற்றபோது தான் வருந்தியாகிலும் அக்கஷ்டத்தைப் போக்க முன்வரவேண்டும்.

குளத்தில் தண்ணீர் இருந்தகாலையில் அதனுடனிருந்து தண்ணீர் வற்றிய காலத்து தானும் கருகி மறுபடி தண்ணீர் வந்தகாலத்து ஓங்கிவளர்ந்து எப்போதும் அக்குளத்தை விட்டு நீங்காமலிருக்கும் தாமரை, அல்லி முதலிய நீர்ப்பூண்டுகளைப்போல ஒரு சினேகனுக்கு வாழ்விலும் தாழ்விலும் அவனை விட்டகலாமல் இருப்பவனே சிறந்த நண்பனாவான்.

அறிவுள்ளவரின் சினேகம் முன் சுருங்கிப் பின் பெருகும். அறிவில்லாதவர் சினேகம் முன் பெருகி பின் சுருங்கும். காரணம் என்னவெனில் தங்களின் முன்னறியாமையும் பின்னறிதலுமாம் ஆதலால் மக்கள் பிறப்பினராகிய நாம் நட்பின் தன்மையை ஆராய்ந்து அதன்படி அனுசரிப்போமாக.

# செய்யுள் பகுதி.

(சாந்தன், மதுரை.)

(212-ம் பக்கத்தொடர்ச்சி)

பஞ்சலக்கணமதனிலோரிலக்கணமெழு
பாரையடியாலளந்தபகவனதுபெயர்கொண்டு
பாண்டிமாநகர்தனைப்பார்த்துக்கையால்வளைத்தே

அஞ்சுதலையான்சடைக்கணிவான்பெயருமறந்
தயனூர்திபெயர்வெறுத்தேயானையின்பெயராகி
மதனவேள்போர்க்கிலக்காயினுள்வந்தணுகுவாய்

மஞ்சுதருவனையகொடைதருமலர்க்கரதலா
மகிமைப்பிரதாபமணியேமாமண்டலேசுரா
கவிஞர்கலிதீர்க்கவருமன்னவாகருணைநிதியே

தஞ்சமெனவந்திடுசனங்கள்வளரும்படிதனந்தரு
துரந்தரிகனே
தமிழின்மகாகும்பமாமுனிக்கிணையாகிய
விதரணிகாபஞ்சயாசனத்திருமேவிய
சயிலபுயாவெங்கடேசுரெட்டமபூபதியே.

(கடிகைமுத்துப்புலவர்)

(இ-ள்) மஞ்சு தரு அனைய கொடைதரு மலர் கரதலா — மேகமும் பஞ்சதருக்கள் போன்ற ஈகையையுடைய தாமரையைப்போலும் கைகளையுடையவனே! மேன்மையாகிய கீர்த்தியையுடையவனே! சிந்தாமணிக்கு சமானமானவனே! மாகூிமைதங்கிய சக்கரேஸ்வரா! வித்துவான்களின் வறுமையைப் போக்கவந்த அரசே! அருளை செல்வமாக உடையவனே! அடைக்கலம் என்று வருகிற ஜனங்கள் மேன்மை அடையும்படி செல்வத்தைக் கொடுக்கும் மேலோனே! ... ... ....
பஞ்சலக்கணம் அதனில் ஓர் இலக்கணம் — யாப்பிலக்கணம் ஆகிற காரிகை என்னும் பெண். எழு பாரை அடி ஆல் அளந்த பகவனது பெயர் கொண்டு — உலகை அளந்த விஷ்ணுவின் பெயராகிய மால் என்னும், காமமயக்கத்தைக்கொண்டு,

பாண்டி மா நகர் தனை பார்த்து கை ஆல் வளைத்து — பாண்டிய அரசனின் தலைநகராகிய கூடல் உன்னும் சுழியை கையால்செய்து, அஞ்சுதலைபான்சடைக்குஅணிவான்பெயர் மறந்து — ஐந்து சிரங்களையுடைய சிவன் தலையில் தரிக்கும மதியென்னும் புத்தியை மறந்து, அயன் ஊர்தி பெயரு வெறுத்து — பிரமனின் வாகனமாகிய அன்னம் என்னும சோற்றை தள்ளி, யானையின் பெயர் ஆகி — யானையின் பெயராகிய தோல் என ஆகி, மதன வேள் போர்க்கு இலக்கு ஆயினள் — மன்மதனின் பூசலுக்கு இலக்ஷியம் ஆக்கப்பட்டாள், வந்து அணைகுவாய் — வந்து அணைவாயாக.

காரிகைமால் கொண்டு கூடல்வளைத்து மதிமறந்து அன்னம் வெறுத்து தோலாகி மதன்போருக்கு இலக்கு ஆயினள் என்பது போந்தபொருள்

---

## சந்தாநேயர்களே!

உங்களில் பலர் எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி சித்தன் பத்திரிகையை அன்புடன் ஏற்று அதன் சந்தா அணா எட்டை மனமுவந்து அனுப்பியிருக்கிறீர்கள். அதற்காக நன்றிபாராட்டுகிறோம்.

சித்தனின் முதல் ஆண்டு முடிவடைய இன்னும் நான்கு இதழ்களே பாக்கி இருக்கின்றன. சந்தாவும் குறைந்த விகிதந்தானே! அடுத்த சஞ்சிகை அனுப்புவதற்குள் பாக்கியிருக்கும் கனவான்கள் மணியார்டர் மூலமாகவோ தபால் ஸ்டாம்பாகவோ சித்தன் வருட சந்தா அணா எட்டை அனுப்பி சித்தனை ஆதரிப்பீர்களென்று நம்புகிறோம்.

மானேஜர்,

சித்தன்.

# திருப்பழநி மாம்பழக்கவிச்சிங்க நாவலரவர்களும் — சீட்டுக்கவிகளும்.

(கோவை. திரு சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள்)

(218-ம் பக்கத் தொடர்ச்சி)

## பிள்ளைவிழுங்கி (தேன்கடலூர்) ஜமீன்தார் கனம் கருணைகிரி மூத்தைய துரையவர்கள் மீது பாடியன.

### I.

பதினறடி ஆசிரிய விருத்தம்.

சிலகாலமா கப்ரபுக்கள் பாற்போய் வரத்
தேகமொத் துக்கொள விலை
சித்தசஞ்ச லமோவனேகம் ஊர்சீங்கி யொரு
தினமேனு மயலி டத்திற்
செல்லச்ச ரிப்படா துள்ளகுட் டிதுவுனது
திவ்ய சமுகத்தை மேவிச்
சிறுமைதீர்த் துக்கொள நினைந்துபய ணத்தையூர்ச்
சிதமாய்ச் செயத்து ணிந்தேன்
பலபேர்ச காராய்வரி னும்மிகவும் புதியர்
பரிசா ரகனும ப்படிப்
பழகியம ருந்தினைச் சாதிக்கவு ந்தக்க
பத்தியம் பாராட் டவும்
பருவபோ சனவகை நடாத்தவும் இணங்குமா?
பாவுகாற் றுக்கும் நோய்க்கும்
பகையல்ல வோயெழுதி வாசிப்ப வர்க்கும்ஒரு
பால் நரப்புச் சிலந்தி
நலதாசி விருளப்ப முகிலும்விரை வாய்வர
நவின்ற காரியமு முண்டு
நன்றுயி வற்றினை மதித்தறி ந்துடனே
நடத்துவ தெல்லாம் நடாத்தி

நாடிய குறிப்பையு ம்முடி த்து விடை தரல் வேண்டும்
நாகரிக மதியூகி நீ
நான்விசே டித்தென்ன சொல்லுவ தசட்டையாய்
நழுவ விடுவது தகாது
தலமேழு மெச்சுதென் கடலூர் சம்ஸ்தான
சக்ராதி பத்ய நிபுண!
தைர்யசுரி வார்குல குபேரா! வலங்கார
தான கர்ணவ தாரா!
சங்கீதசா கித்யசாஸ் திரப்ரச ங்கசெய
தர! சமுக கோலா கலா!
தருண நிட வஜ்ரபுய கருணகிரி முத்தைய
தயாள கெம்பீர துரையே.

[அரும்பதவுரை:– குட்டு – இரகசியம். நவின்ற–சொன்ன. நாகரிக – சாதுரியமுடையவனே! மதியூகி – மதிக்கின்ற அறிவுடையவன். அசட்டை – பராமுகம். கோலாகலா! – மனக்களிப்புடையவனே! அல்லது இடம்பமுடையவனே!. வஜ்ரபுயம் – திண்ணியதோள். கெம்பீரம் – உயர்வு.]

(குறிப்பு:– இச்சீட்டுக்கவியை நமது கவிச்சிங்க நாவலரவர்கள் தமது இல்லத்திலிருந்துகொண்டே தமது கற்றுச்சொல்லிமூலம் எழுதி சமீன்தாருக்கு அனுப்பியதாக கவியின் வாசகத்தால் அறியப்படுகிறது. இங்ஙனம் எழுதியனுப்பியது தாம் பிணிவாய்ப் பட்டிருந்ததனாலென்க. நாவலர் காலத்தில் தாசில்தாராயிருந்த ஸ்ரீ இருளப்ப பிள்ளை அவர்கள் இன்ன ஊரினன் என்று அறியக்கூடவில்லை. சுரிவார் குலம், கம்பளத்தாரென்னும் ஓர் வகையினர். இவர்கள் திருநெல்வேலி ஜில்லாப்பகுதியினர். "பருவக்காற்றுக்கும், நோய்க்கும் பகை" என்பது ஓர் அநுபவ பழமொழி.

## II.

### இரட்டை ஆசிரிய விருத்தம்.

வருடமிது ரண்டினுக் குள்ளசம் பாவனை
வழக்கப் படிக்கு நல்கி
வாக்குக் கொடுத்த பிரகாரமே யொருபெட்டி
வண்டியுஞ் சோடி மாடுங்

தருணமிதில் வரிசையாய்த் தயவுசெய வேண்டுஞ்
சம்ஸ்தான மெங்கு நின்பேர்
தானே ஜொலிக்கு மல்லாமலுஞ் சுகிர்தமுயர்
சௌபாக்ய மொன்று பத்தாம்
அருமையு டையோர்க் கென்னவுபசார மையநீ
அறியாத விஷய முளதோ!
அற்புதக் கடலூர்ப் ரதாபக்குரி வார்குல
அலங்கி ருதக்கிரீ டாதிபா!
முருகுவிரி முல்லைப் புயாசலா! கருணகிரி
முத்தைய னேந்த்ர னீன்ற
மோகன சபாவுசித முகசந்த்ர கருணகிரி
முத்தைய துரைச் சிங்கமே.

[அரும்பதவுரை:- சம்ஸ்தானம் – இராஜசபை. ஜொலிக்கும் – பிரகாசிக்கும். சுகிர்தம் – நல்லறம்; புண்ணியப்பயன். சௌபாக்கியம் – மேலான செல்வம். பிரதாபம் – கீர்த்தி; வீரம். மோகனு! – பிறரை மயங்கச்செய்யும் பேரெழில் வாய்ந்தவன். சபாவுசிதன் – அவைக்குத்தகுதிவாய்ந்தவன்; முகசந்திரன் – சந்திரனது முகம் போன்றவன். சம்பாவனை – காணிக்கை.]

(குறிப்பு:- இச்சீட்டுக்கவியில் "வருடமிது ரண்டினுக்குள்ள சம்பாவனை வழக்கப்படிக்கு நல்கி" என்ற சொற்றொடரால் இவர் ஒவ்வோர் ஆண்டுதோறும் சமீன்களைக்காணச் செல்லும் வழக்கமுண்டென்பது அறியப்படுகிறது.)

(வேறு.)

III.

முருங்கைப்பட்டி மிட்டாதார் கனம்
சின்ன கிருஷ்ணம நாயக்கரவர்கள் மீது
பாடியது.

பதினறடி ஆசிரிய விருத்தம்.

தருணமிது நினது சமுகத்தினிற் சிற்சில
சமாசாரம் அறிவிக் கிறேன்

சமயத்தை யோசியா மற்சொன் னதாகச்
சலித்திடா மற்கிர கித்துத்
தடையின்றி யெண்ணிக்கை தனைமுடிப் பதுநினைச்
சார்ந்த தேதவ றுண்டு
தாய்முலைக் குத்துவலி சவலைக்குழ ந்தைகரு
தாததது சுபாவ மன்றோ!
வருடமொரு மூன்றாக மறுதேச சஞ்சார
மாற்றி யுள்ளூரி லுற்ற
வயணத்தி னால்பெட்டி வண்டிபல் லக்குமுதல்
வாகன மெலாஞ் சிகஸ்தாய்
மனதிற் கலக்கமே மலிதரப் பெற்றேன்
மயங்கி வேளைப் பிசகினால்
மற்றுனை யலாதொரு வர்க்குமிது தெரிவிக்க
மாட்டேன் அநேக மாகப்
பருவமித னிற்பலச மீன்தார்கள் பாற்சென்று
பாடி அவ்வறுமை நீக்கப்
பயணமாகி யதிற்சவா ரியில்லா மையாற்
பைந்தமி ழினருமை தேர்ந்த
பதவாகி மதியூகி நீயென்று நம்பிஇப்
பதிகதி யெனப் புகுந்தேன்
பகருமக் கோரிக்கை நிறைவேற்றி யதிகசௌ
பாக்யமொடு வாழ்தல் வேண்டும்
திருவனிதை மருவுமங் கலவரத ராசரைத்
தினமும் மறவாத நேமா!
திகழ்கம்ம வார்குல சிகாமணியெ னுங்கண்ய
தீரா! பரோப காரா!
சிகரிபரி மளகளப முலைமாதர் மடலெழுது
செகன்மோ கனப்பிர தாபா!
திடசுலக்ஷ ணகாம தடமணிப் புயவிமா!
செயகி ருஷ்ணம பூபனே.

[அரும்பதவுரை:— சமுகம் – சந்நிதி; நேரில். சுபாவம் – இயல்பு; இயற்கை. வயணம் – வகை. சிகஸ்து – சேதமா

னது; திசைச்சொல். சவாரி — வாகனம். பதவாகி — அறிகின் றவன்; திசைச்சொல். திருவனிதை—இலக்குமி. நேமா—நியமமுடையவனே. திகழ —பிரகாசிக்க. சிகரி பரிமள களப முலை — கலவைச் சாந்தணிந்த மலைபோன்ற தனம். மடல் எழுதுதல் — தான் காதல்கொண்ட கணவனது உருவத்தைக் கையால் வரைவது. ஜகன்மோகனு — உலகம் மயங்கும் எழிலுடையவனே! பிரதாபா — கீர்த்தியுடையவனே. திடசுலக்ஷண — உறுதியும் உத்தமமுமான அழகும் உடையவனே! காம — மதனனே! தடமணிப்புய — விசாலமான தோள்களில் மணிப்பூண் அணிந்தவனே!. பூபனே — அரசனே!]

(குறிப்பு:— இச் சீட்டுக்கவியின் ஐந்தாவது அடியில் "வருடமொரு மூன்ருக மறுதேச சஞ்சார மாற்றி, யுள்ளூரிலுற்ற வயணத்தினுல்" என்றசொற்றொடரால், மாம்பழக் கவிச்சிங்கம் அவர்கள் இராமநாதபுரத்தினின்றும், தாம் பிறந்த ஊருக்குத் திரும்பிவந்து மூன்று வருடங்கள் ஆயின என்பது புலனுகின்றது. அவ்வாருயின் இச்சீட்டுக்கவி வரைந்த காலம் கி. பி. 1866-ம ஆண்டெனக்கொள்ள வேண்டும். மாம்பழம் அவர்கள் கி. பி. 1853-ம் ஆண்டில் பழநிப் பதியினின்றும் இராமநாதபுரம் ஸ்ரீமான் பொன்னுச்சாமித் தேவரவர்கள் சமுகம்சென்று அங்கேயே பத்தாண்டுகள் தங்கி கி. பி. 1863-ம் ஆண்டில்தான் தமது ஜனன தேசத்துக்குத் திருப்பினரென அறிஞர்கள் கணக்கிட்டிருக்கின்றனர்.

"சவலைப்பிள்ளை முலைக்குத்து நோவறியுமா?" என்பது பழமொழி. அதனை நமது நாவலர் தமது கவியில் உவமானத்துக்கு எடுத்துபயோகித்திருக்கின்றனர்.

கி. பி. 1866-ம் ஆண்டில் முருங்கைப்பட்டியில் கம்மவார் குலத்தோன்றலாகிய ஸ்ரீமான் சின்னகிருஷ்ணம நாய்க்கரவர்கள் கொடையாளியாகவும், தமிழறியும்செல்வராகவும்' மிட்டாதாரராகவும் விளங்கியதாக இச்சீட்டுக்கவியால் அறியப்படுகிறது.

(தொடரும்)

# தங்கச் சங்கிலி.

சிறுகதை

( R. P. ராஜன், பொருளூர். )

ஒருநாளுமில்லாத திருநாளாகவன்றோ, இன்று இந்தச் சிறு குழந்தைக்குத் தோன்றுகிறது! அவளது மாசற்ற உள்ளத்தில், அன்பு நிறைந்து, ஆனந்தம் பொங்கிக்கொண்டிருக்கிறது. சிறிதுநேரத்தில் தன்னையும் மறந்துநிற்கத் தொடங்குகிறாள். அன்று அதிகாலையிலேயே எழுந்திருந்து வீட்டுவேலைகளைச் சீக்கிரமாக முடித்துக்கொண்டு — இந்தச் சிறுபெண்குழந்தை-மிகுந்த ஆவலுடன்-வெளியில் ஓடிவந்து பார்ப்பதும் - அப்புறம் ஏமாற்றமடைந்து - திருப்தியற்ற மனதுடனே வீட்டிற்குள் போவதுமாக ஏன் இருக்கவேண்டும்? ஆம்! இன்று வெள்ளிக்கிழமை. ராஜூவிற்கு சனிஞாயிறுவிடுமுறைநாட்கள்வந்துவிட்டதல்லவா? இரண்டு நாளைக்கு நம்முடன் விளையாண்டுகொண்டே இருப்பானே! என்று அந்தக் குழந்தையின் உள்ளம் எண்ணியது. ஆனந்தத்தால் விழிக்கடைகளில் நீர் ததும்பிற்று. சற்றுநேரத்திற்கெல்லாம் முத்துக்களெனப் பலபல வென்று கண்ணீர் சொறிந்தது. செல்லம்! ராஜூவந்தால் வந்துவிட்டுப்போகிறான். அதுவும் இன்றுசாயங்காலந்தானே அவனும் வருவது அதற்குள், ஏன் வீணில் ஓடிஓடிப் பார்த்து பார்த்த கண்ணும் பூத்துப்போகிறாய்! வா இங்கு! வந்து தலையை வாரிக்கொள்ளென்று அவளது அத்தை கூப்பிட்டபொழுது, 'செல்லம்' "போங்கள் அத்தை! ராஜூவும் வந்தால்தான்! அவன் வந்து என் பக்கத்தில் உட்கார்ந்திருந்தால்தான் எனக்கும் பின்னல் நன்றாகயிருக்கும்-மனதிற்கும திருப்தி!" என்று சொல்லுவாள். அப்படிக் கூறும்பொழுது, அவளது கண்டம் விம்மிற்று.

செல்லத்திற்கு ராஜூவைப்பற்றி நினைக்கும்போதெல்லாம், ஒரே சந்தோஷமாகக் கூடிக்கொண்டுவந்து தோன்றும். அதுவும், அவன் தன்னைக் கேலிசெய்து விளையாடுவதையும், பின்னல் சடையைப்பற்றி இழுத்து விஷமம் செய்

வதையும் நினைக்கும்போது அவளது கன்னங்கள் குழிந்தன மாசற்ற வதனத்தில் இள நகை அரும்பிற்று.

செல்லத்திற்கு அப்பொழுது வயது எட்டு ஆகிக் கொண்டிருந்தது. தனது மாமன் வீட்டிற்கு வந்ததிலிருந்தே புதியதோர் உற்சாகம் அவளதுஉள்ளத்தில் தலைதூக்கிநிற்க ஆரம்பித்தது. வேறு எல்லாக்காலங்களைக்காட்டிலும் ராஜு வின் அன்பு வெளிப்படும்பொழுதுதான் அது விவரிக்க இயலாத சந்தோஷத்தை அவளுக்கு அளித்துவந்தது. எவ்வளவோ துன்பங்களை இதற்குள்ளாக, இந்தச் சிறு பெண்ணிற்கு கடவுள் அளித்திருந்தாலும்கூட, அவைகளையெல்லாம அந்தக்குழந்தையின் உள்ளம் பொருட்படுத்தவில்லை. ராஜுவின் தந்தையாகிய பீமய்யா தன்னை எவ்வளவு கடிந்தாலும்சரியே-தனக்கு எவ்வளவு துன்பங்களை இழைத்தாலும்சரியே-அவைகளையெல்லாம் அனுபவிக்க, செல்லம், ஆவலுடன் தயாராயிருந்தாள். ஆனால் ராஜு என்னகுற்றங்களைச் செய்தபோதிலும், அவனை ஒருவரும் ஒரு சொல்லாவது கடிந்து சொல்லக்கூடாது! அப்படி சொல்ல நேர்ந்தால் அது செல்லத்தின் ஹிருதயத்தில் ஒரு முள் தைத்தது போலிருக்கும். பீமய்யா இவ்விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாகவே இருந்துவந்தார். எப்போதாவது பீமய்யா ராஜுவை மனம் வருந்தும்படி செய்ய நேர்ந்தால், உடனே அவன் அழ ஆரம்பிப்பான் கண்கொட்டும்நேரம்தான். செல்லம் கெஞ்சுதலின் சித்திரமாக அவன் முன்புவந்து நிற்பாள். ஒருவித பரிதாபகரமான பார்வையுடன் அவள் அவனை நோக்கும்போது செல்லத்தின் கண்கள் பஞ்சடைந்து ஒளி இழந்து தோன்றும். ஏமாற்றத்தால் மழுங்கியிருக்கும் அவ்விரு கண்களினின்றும் கண்ணீர்த்துளிகள் கீழே உதிரும். அவ்வளவுதான்! உடனே ராஜு செல்லத்தைக்கேலி செய்வான். செல்லம் சிரிப்பாள். ராஜுவும் சிரித்துவிடுவான்.

எனவே, எட்டே வயதுடைய சிறுமியும், பன்னிரண்டு வயது நிரம்பாத ஓர் சிறுவனும் ஒருவருக்கொருவர் காட்டிவந்த அன்பையும் அபிலாசைகளையும் கண்ணுற்ற பீமய்யா, ஆச்சரியப்பட்டு எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணுவதி

னும், இவரின் மனைவியோ இப்போது இருவருமே புருஷன் பெண்சாதிகளாகவேயிருந்து இல்வாழ்க்கையே நடத்துகிறார்கள்; இதென்னடி இந்த செல்லம்! தன் சுகத்தைப்பற்றிய கவலையே இல்லாது எல்லாம் ராஜுக்குத்தான் என்று சொல்லுகிறதே! என்று தன் வயமிழந்து ஆச்சரியப்படுவதிலும் ஒன்றும் ஆச்சரியமில்லை.

செல்லத்திற்கு இப்பொழுது வயது பன்னிரண்டு ஆகிவிட்டது. அவளுடைய கல்யாண விஷயமாக பீமய்யா தம் மனைவியிடம் பிரஸ்தாபித்தார். ராஜுவிற்கே செல்லத்தை கலியாணம் முடித்துவிடலாமென்று எவ்வளவோ மன்றாடினார். ஆனால் அந்த அம்மாள், "எப்போது இந்தபாவி வீட்டைவிட்டுத்தொலைவாளோ என்று எட்டிக்காய் சாப்பிட்டுக் கொண்டிருந்தவளாதலால் இதைக்கேட்டதும் விஷத்தையே சாப்பிடலானாள்." நீங்களொன்றும் தெரியாமல் சொல்கிறீர்கள் செல்லம் தாய்தந்தையற்ற அனாதை. நம்மையே தஞ்சமென்று வந்து அடைந்தவள். மேலும் அவளை வேறே எங்கேயாவது கலியாணம் செய்துகொடுத்துவிட்டால், அவளுக்காகவரும் வரதக்ஷிணையைக்கொண்டே ராஜுவின் கல்யாணத்தையும் சிறப்பாகமுடித்துவிடலாம். போயும்போயும் ஒரு ஆஸ்தியுமில்லாத பெண்ணை என் ஒரு பிள்ளைக்குச் செய்துகொள்ள துளிகூட சம்மதிக்கமாட்டேன் என்று அவள் தம் அபிப்பிராயத்தைத் தெரிவித்தாள். பீமய்யாவிற்கு அதுவே சரியென்று பட்டது. உடனே உள்ளூரிலேயே புரோகிதம் செய்துகொண்டிருந்த ஒரு கிழவருக்கு செல்லத்தை மூன்றாந்தாரமாகக் கொடுக்கத் தீர்மானித்து, அதற்குவேண்டியவற்பாடுகளையும்செய்யலானார். இவைகளையெல்லாம் அருகில் நின்று கேட்டுக்கொண்டிருந்த செல்லத்திற்கு ஒன்றுமேவிளங்கவில்லை. அவளை அறியாமல்அவளது வாய் ஆ!......ராஜு....என்று சொல்லிக்கொண்டது. எக்காரணத்தைக்கொண்டோ அவளதுமுகத்தில் ஓர் இருண்ட சாயை தோன்றி மறைந்தது.

அன்றுஇரவு படுக்கையில்புரண்டுகொண்டே செல்லம், எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி தலையணை நனையப்புலம்பலானாள். பழைய நினைவுகளெல்லாம் அந்தக்குழந்தைக்கு

இறகுமுளைத்து எதிரில் வந்தது. இன்று இரவுதான் கனவு கண்டதுபோல் தோன்றிய, தமது தாய் தந்தையரிடத்தில் வாழ்ந்த வரலாறுகளையும், தமது பெற்றோர்கள் வாழ்ந்த அந்தக்காலத்தைப்பற்றி பாட்டி சொல்லிய பெருமைகளையும் எண்ணிஎண்ணி இரத்தக்கண்ணீர் வடிக்கலானாள். கலியாணம் என்றால் இன்னதென்றே அறியாத அந்தச் சிறு குழந்தையின உள்ளத்தில் ஒருபெரிய பாராங்கல்லை வைத்ததுபோலிருந்தது.

செல்லத்தின் கலியாணம் சிறப்பாகவே நடந்தது. ராஜுவுக்கோ அந்த கலியாணத்தின் அர்த்தம் இன்னது தான் என்று அறிந்துகொள்ள அப்போது அவனுக்கு போதிய சக்தி இல்லை. வழக்கம்போல் செல்லத்தின் தலை மயிரைப்பற்றி இழுப்பதும் கேலிசெய்வதுமாக விளையாடிக் கொண்டே கலியாணவைபவங்களிற் கலந்துகொண்டான்.

மேலும் ஒருவருஷம் சென்றது. ராஜு மேல்படிப்பிற்காகச் சென்னைக்குச்சென்று அங்கு படித்துக்கொண்டிருந்தான். ஒருநாள் அவன் தன் அறையில் உட்கார்ந்துகொண்டு ஏதோ புத்தகத்தைப் பார்த்தவண்ணம் சிந்தனையிலாழ்ந்திருந்தான். பாதி படித்தபடி இருந்த அப்புத்தகம் அவனது மார்பில் கிடந்தது. அன்று காலையில் அவன் எதிர்பாராத விதமாய் செல்லம் விதவையான செய்தியடங்கிய தந்தி ஒன்று வந்தது. இரு கண்களையும் மூடியவண்ணம் ராஜு எண்ணுதலெண்ணமெல்லாம் எண்ணலானான். புண்ணடைந்த அவனது மனம் ஒரு முடிவிற்கும் வரமுடியாமல் தத்தளித்துக்கொண்டிருந்தது.

இருவிசாலமான கண்களினின்றும் கண்ணீர் அருவியென ஓடி மார்பில்கிடந்த புத்தகத்தை நனைத்தது. சாளரத்தின் வழியாக காலைச்சூரியனின் ஒளிபுகுந்து அவனது கண்ணீர் திவலைகளில் ஊடுறவிச்சென்று அவைகளை முத்துக்களென பிரகாசிக்கச்செய்தது. அன்று அவன் செல்லத்தைப்பற்றி எண்ணும்போதெல்லாம் அவனது மனம் குமுமென்றது. வர்ணிக்கமுடியாத ஒருவித துன்பம் அதில் புகுந்துகொண்டு

அவனை வாட்டத் தலைப்பட்டது. ஆனால் செல்லம் இனி மேல் தன் புருஷன் வீட்டிற்குப் போகமாட்டாளல்லவா என்ற எண்ணமும் ராஜுவின் உள்ளத்தில் தோன்றி கொஞ்சம் சந்தோஷமும் அனுபவிக்கலாயிற்று.

பரீட்சை எப்போது முடியுமென்று காத்துக்கொண்டிருந்த ராஜு, அது முடிவுற்றதும் ஓடோடியும் ஊருக்கு வந்தான். வரும்பொழுது அவன் மனமெல்லாம் செல்லத்தைப் பற்றியே நினைத்துக்கொண்டிருந்தது. வீட்டை அடைந்ததும் அவன் முதலில் கண்டது செல்லம்தான். அவளைக் கண்ணுற்றதும் அவனது மனதில் விவரிக்க இயலாத ஓர் உணர்ச்சி எழுந்தது. உடனே குபீலென்று ரத்தம் முகத்தில் பரவ ஆ! என் செல்லம்!.... என்று சொல்லிக்கொண்டே திகைத்து நின்றான். தான் பச்சைக்கிளி என்று நினைத்திருந்த அந்த செல்லம்-தன்னுடைய உடைமைக்கு-மொட்டை அடித்து முக்காடும் போட்டிருந்தார்கள்! அன்றிரவு ராஜு சரியாக போஜனமும் செய்யவில்லை. அவனுக்கு செல்லத்தைப்பார்க்க பயமாகவிருந்தது. இதழ் விரித்து, தன்னைச் சுற்றியும் நறுமணம் வீசிக்கொண்டிருக்கும் ரோஜா மலர் இப்போது வாடி வதங்கிக்கிடப்பதாக அவன் எண்ணினான். முன்னிருந்த உற்சாகமும், முகத்தில் தவழ்ந்துகொண்டிருந்த புன்னகையும் இவளுக்கு இப்போது எங்கே சென்று மறைந்தது? என்று ராஜு எண்ணமிட்டுக்கொண்டிருக்கும்போது பீமய்யா ஏதோ காரியமாக வெளியில் புறப்பட்டுக்கொண்டிருந்தார். அப்போது எதிர்பாராத விதமாய் செல்லம் அவர் முன்பு வந்தாள். அதைக்கண்ட பீமையா அளவில்லாத கோபத்துடன் சீ! கழுதை! வயசாகல்லே கடாமாடாட்டமா, துர்சகுனமா எதிரில் வருகிறது. எங்கேயாகிலும் போய்க் குந்திக்கிடப்பதற்கென்ன கொள்ளை! என்று திட்டிக்கொண்டே வீட்டில் வந்து உட்கார்ந்துகொண்டார். செல்லத்தின் கண்கள் ஏமாற்றத்தால் மழுங்கின. அவற்றினின்றும் முத்துகளென இரு கண்ணீர்த்துளிகள் கீழே உதிர்ந்தது. இதைக்கண்ட ராஜுவின் உள்ளம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணலாயிற்று. செல்லத்திற்கு இப்படியாகுமென்று நினைக்காத அவன் மனம் அடைந்த வருத்தத்திற்கு அளவே இல்லை.

ராஜுவுக்கு இரண்டுபெண்சகோதரிகள் இருந்தார்கள். அவர்கள் நல்ல ஆடை ஆபரணங்களை அணிந்துகொண்டும், தங்கள் தலைக்கு புஷ்பங்களைச் சூடிக்கொண்டும், கொஞ்சிக் குதித்து விளையாடும்பொழுதெல்லாம் செல்லம் ஏமாற்றத் தால் மயங்கித்தியங்கி நிற்பாள். அப்போது அவள் அருகிலும் வரக்கூடாது என்று ராஜுவின் தாயார் திட்டுவாள். ஏன்? ராஜுவின் தங்கைகள்கூட இப்போது செல்லத்தை விளையாட்டில் சேர்த்துக்கொள்வது கிடையாது. அவர்கள் திட்டும்பொழுதெல்லாம் ராஜு பரிதாபகரமாக செல்லம் தைப்பார்ப்பான். இதையறிந்து செல்லம் தன்னையறியாது கண்ணீர் சொரிவாள். அப்போது ராஜுவின் மனநிலை வர்ணிக்க இயலாதபடி இருக்கும். ஒரு தடவை வெளியூருக்குச்சென்றிருந்த பீமையா தன்னுடைய இரண்டு பெண் குழந்தைகட்கும் இரு தங்கச்சங்கிலிகளை வாங்கிவந்திருந்தார். கூடத்தில் உட்கார்ந்துகொண்டு தமது மனைவியுடன் பேசிக்கொண்டே குழந்தைகளைக் கூப்பிட்டார். சிறுமிகள் வந்ததும் இருவருக்கும் இரண்டு தங்கச்சங்கிலியையும் கழுத்திலணிந்து ஆவலுடன் அவர்களுக்கு முத்தமளித்தார். செல்லமும் அவர்களுடன் வந்திருநதாளாகையால் தனக்கும் சங்கிலி கிடைக்குமென்று ஆவலுடன் நின்றுகொண்டிருந்தாள். பதின்மூன்று வயதுக்குழந்தைதானே செல்லம், அவளுக்கு அந்தச்சங்கிலிகளைப் பார்க்கப்பார்க்க தானும் அவைகளை அணியவேண்டுமென்று அதன்மேல் அபார ஆசை கொண்டாள். உடனே செல்லம் 'மாமா! எனக்கு! எனக்கும் ஒன்று என்று கெஞ்சினாள். பீமய்யாவின் மனைவிக்கு அளவு கடந்த கோபம் வந்துவிட்டது. சீ! போ! அறுத்த கழுதைக்குத் தங்கச்சங்கிலியாம்! சனியன்! என்று கடிந்தாள். செல்லத்தினுடைய கண்களினின்றும் மளமள வென்று கண்ணீர் பெருகலாயிற்று. ஓவென்று அழுதவண்ணம் வீட்டிற்குள் போனவள் அங்கு ராஜுவைச் சந்தித்தாள். அவனைக்கண்டதும் விம்மி விம்மி அழ ஆரம்பித்துவிட்டாள். அழுதுகொண்டுவந்த செல்லத்தின் தலையைத் தடவிக் கொடுத்துக்கொண்டே ராஜு காரணத்தைக் கேட்டான். செல்லம் விம்மி விம்மி அழுதுகொண்டே விஷயத்தை சொல்லக்கேட்ட ராஜு தானும் அழ ஆரம்பித்துவிட்டான்.

காலச்சக்கரம் சுழன்று சென்றுகொண்டிருந்தது. எப்படியோ பத்து நாட்கள் வெகுவேகமாக ஓடி மறைந்தன. செல்லம் இப்போது படுத்தபடுக்கையாய்க் கிடக்கிறாள். நாளுக்குநாள் அவளுடைய உற்சாகமும், தளதளப்பும், திரேகசௌக்கியமும் மறைந்துகொண்டேபோய் இப்போது இவளை இந்தக்கதிக்கு ஆளாக்கிவிட்டுவிட்டது. ராஜுவைப் பக்கத்திலிருத்திக்கொண்டு அவனைப் பரிதாபகரமாகப் பார்த்துக்கண்ணீர் சொரிவாள். மிகுந்த ஆயாசத்துடனும், ஞாபகப்பிசகுடனும் ஒவ்வொரு சமயம் 'தங்கச்சங்கிலி' 'தங்கச்சங்கிலி' என்று தம மெல்லிய குரலில் கூவுவாள். பீமையாவின் குழந்தைகளிரண்டும் சங்கிலிகளை அணிந்துகொண்டு பக்கத்திலிருப்பதைப் பார்த்து ராஜு! ராஜு! இந்தச்சங்கிலிகளைப்பார் என்று அவைகளைச் சுட்டுக்காட்டி சிரித்தாள். அப்புறம் ராஜுவைப்பார்த்து கண்ணீர் சொரிந்துகொண்டே மற்றவர்களையும் ராஜுவையும் கோவென்று கதறவிட்டுவிட்டு செல்லம் பரலோகம் சென்றாள்.

துக்கமே வடிவாகத்திகழ்ந்த அவளது முகத்தையும்- அன்பே உருவாகத்தோன்றிய செல்லத்தின் சவத்தையும்- பார்த்துக்கொண்டிருந்த ராஜுவின் கண்கள் மாலைமாலையாக கண்ணீர் சொரிந்தன. அவனது கண்ணீர் அருவி முடிவற்று பெருகிக்கொண்டே இருந்தது. சுபம்!

———

"சுசீலா"

சுகந்த வாசனைத் தைலம்.

நூதனமுறைப்படி தயாரிக்கப்பட்டது. இது கூந்தலை கருமையாக வளரச்செய்யும். ரோமம் உதிர்தல், தலையில் உண்டாகும் பொடுகு முதலியவைகளை நீக்கும்.

புட்டி 1-க்கு விலை அணா 10.

கிடைக்குமிடங்கள்:- உடுமலை K.S. ராமநாத அய்யர்,
ஷண்முகானந்த பவன் ஹோட்டல், பழனி.

பீம விலாஸ், அடிவாரம், பழனி.

# பழநிப்பதியும் பாவலர் மகிமையும்.

(திரு. மு. கா. அம்பலவாணன் அவர்கள்,)
சமஸ்தான வித்வான், இடையகோட்டை.

ஆழிசூழுலகத்து இறைவன் சிருட்டிப்பொருளில் சரம் அசரமென இருவகுப்பினுள் நானுவித ஜீவபேதங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு ஜீவவர்க்கத்திலும் பல்வேறு குணபேதங்கள் காணப்படுகின்றன. இவ்வுலகத்தின் முதன்மையானது பிராணிவர்க்கம். அவ்வர்க்கத்தில் மனிதனும் ஒருவனென்பதை யாவரும் மறுக்கமாட்டார்கள். மனிதனைத் தவிர மற்றபிராணிகள் ஐந்து அறிவையுடையன என்பது நமது முன்னேர்களின் துணிபு. அம்முறையில் மற்றபிராணிகளைக்காட்டிலும் மனிதன் விசேடித்த பகுத்தறிவை உடையவனென்பது பெறப்படுகின்றன இவ்வறிவின் அரும் பெரும் ஆற்றலாலேயே மற்றபிராணிகளை அடக்கி ஆண்டு வருகின்ருன். மனிதன் ஆழ்ந்த சிந்தனைசக்தியை உடையவன். இறப்பு, எதிர், நிகழ்வென முக்காலங்களையும் இனிதே உணரக்கூடியவன். அஃதன்றி, இம்மனிதனே நான் யார்? என்னுள்ளம் யார்? இவ்வுலகம் யாது? இவற்றிற்கு காரணபூதன் யார்? என விசாரிக்கத்தகுந்தவன். இவ்விசாரத்தாலேயே ஆத்மபோதமெனும் ஞானபூமியை அடைகின்ருன். சத்விசாரமுடைய எந்த மனிதனுக்கும் சாதனங்களாயமைந்தவைகள் மூன்று. அவை மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முப்பெரும் பொருள்களேயாம். இம்மூவகைப் பொருள்களும் ஒருங்கே அமையப்பெற்ற நம் மாபெரும் பழனிப்பதியின்கண் எழுந்தருளியிராநின்ற முருகப்பெருமானும், அவன் உறைவிடமாம் இத்திருப்பழனியும் யாவற்றினும் முதன்மையுடையனவென்பதை பக்தசீலர்களாய் ஒழுகும் அன்பர்கள் யாவரும் முழுமனதோடு ஒப்புவார்களென்பது திண்ணம். இம்மாபெரும் பழநிப்பதியைத் தீந்தமிட் பாசுரங்களாற் பாடித்துதித்த பற்பலரிற் முதன்மையானவர் ஐவர். அப்பாவலர் வருமாறு:—

"நற்கீரர் அருணகிரி நாயகமாம் மாம்பழமும்
அற்புதஞ் சேர்முருகதாஸ் அப்பனுமாய்—நற்புகழ்சேர்
சேலத்தினன்கமர்ந்த திவ்ய திருச் சுந்தரனுர்
ஞாலத்தே பண்ணுர்ந்தார் நாடு".

மேற்குறித்தசெய்யுளின்படி பஞ்சபூதமேயன்ன ஐவர்களின் திவ்ய திருச்சரிதவரலாறுகளேயும் அன்னுரியற்றிய அரும் பெரும் நூல்கள் இன்னவை என்பதையும் ஒருவாறு எடுத்துக்காட்டி மேற்செல்வோம்.

## நற்கீர தேவனுர்.

இப்புலவர் பெருமகனுர் மதுரைக் கணக்காயனுர் புதல்வர். இவர் கடைச்சங்க காலத்துப் புலவர்களிற் முதன்மை வாய்ந்தவராயிருந்தனர். இப்புலவர்பெருமான் தன்னே ஒப்பாருமிக்காருமின்றி தமிழாய்ந்த காலத்து தருமியென்னும் தக்கான் ஒருவன் தன் வறுமைப்பிணிக்கு ஆற்ருது மதுரையம்பதியில எழுந்தருளியிராநின்ற சோமசுந்தரப் பெருமானின் திருச்சந்நிதானத்தில் தனது குறைகளனைத்தும் ஒருங்கே முறையிடுவானுயினன். அவ்வமயம எம்பெருமான் மனமுவந்து "ஹே! தருமியென்னும் தக்கானே! பாண்டியன் அவைக்களத்து விலயுயர்ந்த பொற்கிளியொன்று கட்டப்பட்டிருக்கின்றது. அக்கிளி அறுந்து விழும்படி புலமை வாய்ந்த எந்தப்புலவன் பாடுகின்ருனே அவனுக்கே அக்கிளியும் உரித்தானது ஆகையால் அக்கிளி அறுந்து விழும்படி யாமொரு செய்யுளியற்றித் தருகின்றேம். அப்பாசுரத்தை அரசன் அவைக்களத்து அஞ்சாது புகல்மின்" என்று "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் திருவருட்பாசுரத்தைக் கொடுத்துதவினர். அப்பாசுரத்தையும் நமது நற்கீரதேவனுர் அரசன் அவைக்களத்து அஞ்சாது குறை கூறுவாராயினர். பின்னர் தருமியின் தளரா அன்பின் வேண்டுதற்கிணங்கி கூடற்பெருமானும் ஓர் பழந்தமிழ்ப் புலவனுய் நின்று வாதிடுவாராயினர். அதுபோழ்தும் நமது புலவர் பெருமான் கொஞ்சமும் அஞ்சாது நீவிர் திருநேத்திரங்களேயுடைய சிவபெருமானுய் இருப்பினும் நும் கவி குற்றமுடைத்து என்று கூறினர். இவ்வபசாரத்தின் பயனுல நற்கீரதேவர் தொழு நோயுடையனுய் பல கஷ்டங்களுக்காளாய் தன் குற்றமுணர்ந்து எல்லாம் வல்ல இறைவனே அன்போடு

பூசிக்க இயல்வதாயினர். அவ்வமயம் தமது வினை முடிவின் பயனால் அயக்ரீவனெனும் பிரம்மராக்ஷஸனிடம் சிக்கி, குகையில் அடைபட்டு வேறு கதியின்றி குன்றுடைப் பெருமான் குமரன்மீது திருமுருகாற்றுப்படை கூறித் துதிப்பாராயினர். அன்னிமிடமே அப்பெருமானால் சிறைமீட்கப்பட்டு பெருமானின் கட்டளைப்படி "கைலைபாதி காளத்திபாதி" என்ற அந்தாதியைப்பாடி பிரானையும் பிராட்டியையும் முழுமனதோடு துதித்து தன் குட்ட நோயைத் தீர்த்துக்கொள்வதாயினர்.

## இன்னாரியற்றிய நூல்கள்.

திருமுருகாற்றுப்படை, கைலைபாதி காளத்திபாதியந்தாதி, இறையனார் அகப்பொருளுரை, திருவிங்கோய்மலை எழுபது, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, திருவெழுக்கூற்றிருக்கை, பெருந்தேவபாணி, கோபப்பிரசாதம், காரெட்டு, போற்றிக்கலி வெண்பா, திருக்கண்ணப்பதேவர் திருமறம் முதலியனவாம். இவர் திருந்திய காலவறையறையை திரு. நா. மு. வேங்கடசாமி நாட்டார் முதலிய பெரியார்களியற்றிய நூல்களில் காணலாம்.

## அருணகிரிநாதர்.

இப்பெரியார் தொண்டைநாட்டிலே திருவருணையென்னும் திருப்பதியிலே இற்றைக்கு சுமார் 460-ஆண்டுகட்கு முன் பிரபுடதேவராஜன் காலத்தே திருவவதாரம் செய்தருளினர். இம்மகான் தம் இளமைக்காலத்து சிற்றின்ப வேட்கையினராய் மாதர்பால் வைத்த மாறுமனமுடையவராய் பல்வேறு பிணிகட்காளாய், மனங்குன்றி சக்தியற்று மனமுடைந்து தம்மை ஆளும் தலைவன் முருகனை எனக் கருதி ஸ்தோத்திரம் புரிவாராயினர். சேனாபதியாம் நம் திருவருட்குமரனும் நாதரை மனமுவந்து தடுத்தாட்கொண்டருளினர். அக்காலந்தொட்டு நாதர் நம் சைவ சமயாசாரியர்களாகிய நால்வரே போன்று குன்றுடைப் பெருமான் கோவில்கள்தோறும் சென்று திருப்புகழென்னும் செந்தமிழ்ப்பாசுரம் ஓதுவாராயினர். இவ்வரும்பெரும் பேற்றால் நாதர் உலக பாசங்களினின்றும் விடுபட்டு பன்னெறியோரும் கண்டு போற்றுதற்குரிய புனிதராயினர். இப்பெரியார்

ஓரமையம் பிரபுடதேவராஜன் அவைக்களத்து ஓர் சம்பிரதாயப்போரில் நிகழ்ந்த சம்பவங்களினால் தேவலோகப் பாரிஜாதம் கொணர்வான்வேண்டி தம் திருவுருமேனியை திருவருணைக் கோபுரத்தின்மீது கிடத்தி கிளியுருவாய்ச் சென்றனர். அவ்வமயம் சம்மந்தாண்டான் என்னும் ஆத்தானப்புலவன் அரசனுக்குச் செய்த சூழ்ச்சியின் பயனால் சுவாமிகளின் தேகம் கொளுத்தப்பட்டு சுவாமிகளின் காலமும் அம்மட்டோடு முடிவாயின. இப்பெரியார் கூறிய திருப்புகட்பாசுரம் 10000-க்கதிமெனக் கருதுகின்றனர். தற்போது 1200-பாசுரங்களே நம்முன் காணக்கிடக்கின்றன. நமது சைவசமய நூல்களில் பக்தியென்னும் பரமானந்த போதத்தைப் போதிக்கும் நூல்கள் மூன்று. அவை தேவாரம், திருவாசகம், திருப்புகழ். இத்திருப்புகழ் பக்திச்சுவை சொட்ட பொருட்சுவை ததும்ப கேட்போர் மனதைப் பரமானந்தக் கடலுள் ஆழ்த்தி இக்காலத்து குன்றின்மேலிட்ட விளக்கென பிரகாசியாநிற்கின்றன. இம்மகான் இத்திருப்புகழேயன்றி கந்தரனுபூதி, கந்தரந்தாதி என்ற பிரபந்தங்களையும் இயற்றி இருக்கின்றனர்.

## "பெண் தேவை"

சைவ வேளாள குலத்தைச்சேர்ந்தவரும், சுமார் 30-வயதுள்ளவரும், உபாத்திமைத் தொழிலில் 35-ரூ சம்பளம் பெற்றுவருபவரும் கௌரதையான குடும்பத்தைச் சேர்ந்தவரும் இதுவரை விவாகமாகாதவருமான ஒருவருக்குப்பெண் தேவை. பெண் எக்குலமாயிருப்பினும் சிறிது கல்விகற்றிருக்கவேண்டும். சாதாரண அழகும், ஒழுக்கமும் அவசியம். கவலையற்ற, நிம்மதியான வாழ்க்கையை நடத்த விரும்புகிற எவரும் விண்ணப்பித்துக்கொள்ளலாம். கடிதங்கள் இரகசியமாய் வைக்கப்படும். விபரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கெழுதவும்.

எஸ். வி. C/o மானேஜர், "சித்தன்" பழனி.

## பாமரமக்களிடையே கல்வி பரப்புவதற்கு ஏற்ற

# வழியும் சாதனங்களும்.

(T. D. சுப்பிரமணியம், கலையம்புத்தூர்.)

"செல்வத்துட்செல்வம் செவிச்செல்வம் அச்
செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை" என்ற

தெய்வப்புலமை திருவள்ளுவனார் வாக்கிற்கிணங்க கல்வி பலவிதத்தும் மனித மேம்பாட்டிற்கு ஏற்ற கருவியாயிருக்கிறது. அக்கல்வி ஒரு சிறுபான்மையோரிடமே அவர்தம் தனிப்பெரும் சிறப்பாக அமைந்து இருத்தலினும் பல்லோரிடமும் பரவி நிற்றலே மேம்பாடுடைத்து. நாட்டின் செல்வம் ஒரு தலை இருத்தலினும் மக்கள் பல்லோரிடமும் இருத்தலே சாலச்சிறந்தது. அஃதேபோல் கல்வியும் நம் நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும் அடையவேண்டிய முதற்பெரும் செல்வம்.

இன்று நமது நாடு உலகில் பல வளங்களில் சிறந்திருப்பினும் பிற்போக்குடைய நாடென்று மேனாட்டாரால் இகழப்படுவது இன்னே! செல்வம் செறிந்திருந்தும் அதனைப் பயன்படுத்துமாறு உபயோகிக்கும் ஆற்றல்கள் இல்லாதொழிந்ததே பலகாரணங்களில் முதன்மையாகப்போற்றுகிறது. ஓரிரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னே கேவலம் விலங்கின் தன்மையைப்பழித்த ஒழுக்கமுடையோராகத் திகழ்ந்தோர் இன்று நம்மால் போற்றப்படுதற்குரியராகினர். இதன் விந்தைதான் என்னே! சுருங்கக்கூறின் அறியாமை என்னும் இருள் ஒழிந்ததே காரணம். அச்சு இயந்திரம் தோன்றிய நாள் முதல் மேனாட்டார் கல்வியில் தலைசிறந்து விளங்குவது ஒருதலை. அக்கல்வியைசமூகமேம்பாட்டிற்குபலவிதத்திலும்

உபயோகப்படுத்தியது வெளிப்படை. சமீபகாலம்வரை ஈனநிலையிலிருந்த ஜப்பானியர் இன்று உலகில் அரும்பெரும் வல்லரசுகளில் ஒன்றாய்த் திகழ்வது தன்னாட்டு இளைஞரை மேனாட்டிற்கனுப்பி கல்வி பயிலச்செய்ததே. இது யாவரும் அறிந்த இரகசியம்.

நிற்க இறையுடனே வாது புரிந்த நக்கீரரும், கவிச்சக்ரவர்த்தியாம் கம்பரும் திகழ்ந்த நம் நாடு இன்று அறிவீனர்கள் நிறைந்திருப்பது என்று மற்றோர் கூறும்போது, தமிழ் வளர்த்த சங்கத்தின் கதியும் இதுவோவென்று அரற்றுகின்றோம். இதற்கு மூல காரணம் எதைக்கூறுவது? யாரை நோவது? அறியாமை இருள் ஆழ்ந்திருப்பதைக் கண்கூடாக் காண்கின்றோம். ஆதலின் இனிமேலாவது நம் நாடு சிறக்க வேண்டுமெனில் பாமர மக்களிடையே கல்வியென்னும் வித்தை வித்துவோமாக.

இன்று பாமர மக்களிடையே கல்வி பரப்புவதே நம் பெருவேலை. அக்கல்வி எத்தகையதாய் இருக்கவேண்டும்? அதன் நோக்கங்களென்ன? அதை அடைதற்கு நாம் கைக்கொள்ளும் சாதனங்களெவை? என்ற இவை போன்ற கேள்விகள் பிறக்கின்றன. இன்று நம் நாட்டு மக்களுக்கு அளிக்கப்படும்கல்வி மக்களின் சமூகவாழ்விற்கு எவ்வகையிலேனும் உறு துணையாயிருக்கின்றதா என்று ஆராய்ந்தால் அந்தோ! "கணிதம் பன்னிராண்டு பயில்வர் பின்கார்கொள் வானில் மீனிலை தெரிந்திலார், வணிகமும் பொருள் பிதற்றுவர், பின் வாழுநாட்டில் பொருள் கெடல் கேட்டிலார்" என்ற கவிஞரின் கூற்றையே தெற்றெனக் காட்டுகிறது. சுருங்கக்கூறுமிடத்து கைத்தொழில் சிறந்ததற்குச் சிறிதேனும் ஏற்றதல்லாத பள்ளிக்குதவா பள்ளிக்கல்வியே போதிக்கப்படுகிறது. ஆதலின் மக்களிடையே பரப்பப்படும் கல்வியானது இன்று போலல்லாது என்றும் அவர்தம் வாழ்விற்கு பெருந்துணையாக நிற்கும் இயற்கல்வியான தொழிற் கல்வியே போதிக்கப்படவேண்டும். இக்கருத்தையே ஆதரித்து மேனாட்டு மேதாவியார் "பென்தம்" என்பவர் சிறார்களுக்குப் பின்னளில் பேருதவியாயிருக்கும் இயற்கல்வி புகட்டவேண்டும்

( 286-ம் பக்கம் பார்க்க )

# நவீன அகராதி.

( ஸ்கேலிடன் )

(223-ம் பக்கத்தொடர்ச்சி)

பண்டிகை — நோய்மூலம்; கடனுக்கு நேர்வழி; ஆர்ப்பாட்டம், சாப்பாட்டு நாள்.

ஜமீன்தார் — சர்க்காரின் செல்லப்பிள்ளை; கொடுத்துவைத்த புண்யாத்மா; அதிர்ஷ்டசாலி; பேரின்பவாசி;

எமதர்மன் — சமதர்மன்; ஜாதி, மத, நிற, நில, குணபேதமற்ற வஸ்து; நீதிபதி; உத்தமன்.

கண்ணீர் — ஆண்களைப் பெண்கள் மயக்கும் ஓர் மருந்து; சமயசஞ்சீவி; பெண்களின் வரப்பிரசாதம்.

இழவு — ஒப்பாரிச் சர்வகலாசாலை; தாடகை நாட்டியம்; சேலைகளின் லீலை; இடி முழக்கம்.

சங்கற்பம் — பொட்டல்; சஹாரா பாலைவனம்; குதிரைக் கொம்பு; ஆமை ரோமம்; ஜீவனோபாயம்.

சட்டசபை — சந்தைக்கடை; நவராத்திரி தர்பார்; வாய்ப்பந்தல்; விளக்கெண்ணெய்.

பத்திரிகை — பத்திபத்தியாய் மை தீட்டப்பட்ட காகிதம்; சர்க்கரை மடிக்குங்காகிதம்; ஓமப்பொடி கட்டும் இதழ்.

திருமண், திருநீறு — பேதக்குறி; சுட்ட மண்ணும், பச்சை மண்ணும்; கீரியும் பாம்பும்.

பிர்ம்மச்சாரி — பெண்கள் மோசம்போகும் ஓர் ஆபத்தான பேர்வழி; சுத்த பைத்தியம்; அசட்டு ஞானம்.

தர்ப்பணம் – தர்ப்பையைக்கொண்டு பணம் தேடல்; மூளைக் கோளாறு.

நாடகம் – பெண்களின் சம உரிமைப் போராட்டத்திற்கு நேர் வழி; காமசாகரம்.

காந்தி – உப்புத்திருடன்; தோட்டி; கோவணதாரி; பொக்கு வாய்; புலித்தோல் போர்த்த பசு; வெள்ளாடு; பிரளய கர்த்தா; காரியப் பேர்வழி; விடாதகண்டன்; உடும்பு; ராஜீயக்கோடங்கி; பட்டினி ராஜா; ஊர் சுற்றி, வியாபாரச்சின்னம்.

தேநீர்விருந்து – காக்கைபிடித்தல்; குல்லாய்போடுதல்; காரிய சித்திக்கு ஓர் உபாயம்; பணச்செருக்கு; பஞ்சதந்திரம்.

பூஜை – முழுப்பூஷணியையும் சோற்றில்மறைத்தல்; ஏமாற்றும் வித்தை; கலப்பில்லாத மோசடி; சோம்பற்றொழில்; விளையாட்டுப்புத்தி; பிழைக்கும் வழி; எல்லோருக்கும் பே பே.

அடியார் – திருட்டு, கொலை முதலிய துன்மார்க்கங்களிலிருந்து உபகாரச்சம்பளம்பெறும் மகாத்மா; லைசென்ஸ் பெற்ற கொள்ளைக்கூட்டம்.

போட்டிப்பந்தயம் – உனக்கும் பே பே; உங்களப்பனுக்கும் பேபே; நாகரீகத்திருட்டு; ஆசைவார்த்தை; சொக்குப்பொடி; மாயாஜாலம்.

இன்சூரன்ஸ் கம்பெனி – அஸ்திவாரம், சுவர், கூரை, நாதி இவையற்ற கட்டிடம்; குட்டிச்சுவர்; மண்ணுங்கட்டி, முதலில்லா வியாபாரம்; நவீனத்திருட்டு.

கற்பு – புருஷனை வைத்துக்கொண்டு விபசாரஞ் செய்தல்; தாலியைக் காப்பாற்றிக் கொள்ளுதல்; புருஷன் பெயர் கூறாமை; பாவனை,

(தொடரும்)

# மாதர் பகுதி

## விவாக ரத்து.

(தோழர். A. B. ஆதித்தர்.)

18992

(229-ம் பக்கத் தொடர்ச்சி)

எனவே மிதமான முறையாயினும், அமிதமான முறையாயினும்மேல்நாட்டு விவாகரத்துவழக்கங்கள் நம்நாட்டுக்கு வேண்டவே வேண்டாமென்று நான் அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறேன். "வேசித்தனஞ் செய்த காரணம் ஒன்றைத் தவிர வேறெவ்வித காரணத்தாலும் விவாக ரத்து கூடாது" என்றும், இடைக்காலத்தில் "உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதய கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார், ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை" என்றும் கிறிஸ்து பகவான் கூறிய திருவாக்கை மேல்நாட்டினருக்கும் நினைப்பூட்டுகிறேன்.

நம்நாட்டில் பெரிய குடும்பங்களிலிருந்து இந்த விவாக ரத்து வியாதி பரவி, இதற்கு ஆதரவாகச் சட்டமும் ஏற்படப்போவதைக்கண்டு அஞ்சுகிறோம். மேல்நாட்டைப்போல் இந்நாட்டிலும் இச்சம்பவம் சர்வசாதாரணமாகிவிடக்கூடிய நாள் சமீபித்துவிட்டதென்பதை நினைக்கும்போது சஞ்சலமாயிருக்கிறது.

முன்பு, லார்டு சின்ஹா மகளின் விபசார விவாகரத்து வழக்குக்குப் பத்திரிகைகள் பிரதான இடம் அளித்துள்ளதைப்போல் தற்போது கல்கத்தா பெனிகாலேஜ் புரொபஸர் ஸ்ரீமான் பிரமாதநாத சர்க்கார் மனைவி ஸ்ரீமதி வீணா B.A., விபசார விவாகரத்து வழக்குக்கு முக்கிய கலங்களைக்

கொடுத்து பிரபல்யப்படுத்துகின்றன. அத்துடன் அரவிந்த கோஷின் சகோதரி மகளான ஸ்ரீமதி லதிகாபோஸ் B.A., விபசார விவாகரத்து வழக்கும் விஸ்தாரமாகப் பிரசுரிக்கப் படுகின்றது. இந்த அம்மாளைப் பத்திரிகையுலகில் அதன் நிருபர் அறிமுகப்படுத்தும்பொழுது "இவர் தமது கணவரான டாக்டர் போஸ் தன்னை 11-கணவர்களுள்ள ஸ்திரீ என்றழைத்ததாகச்சொல்லி முன்பு போலீஸ் கோர்ட்டில் பிராது செய்துகொண்டவர்" என்று தெரிவிக்கிறார். இஃதன்றி ஸ்ரீமதிகமலாதேவிசட்டோபாத்தியாயா தன் வேலைக்காரியுடன், தன் கணவன் விபசாரம் செய்ததாக நடத்தி முடிந்த வழக்கு ஒருபக்கம். மறுபக்கம் பரோடா கிலிராஜாவின் சகோதரரும், தமது கணவருமான ஸ்ரீமான் விட்டல் சிந்தாமணி பட்டவர்த்தனர் நெடுங்காலமாக பிரமச்சர்ய விரதமநுஷ்டிப்பதாகச் சொல்லி அவருடன் தனக்கு நடந்திருந்த விவாகத்தை ஸ்ரீமதி மாலதிபாய் ரத்துச்செய்து கொண்டுவிட்டசெய்தி, பத்திரிகைகளின் பக்கங்களுக்கு இச்செய்திகளைத்தவிர வேறு விஷயமில்லையா? இவைகளைப் படிக்கும் மக்கள் மனோநிலை எப்படியாகுமென்பது அரசாங்கத்துக்கும் தெரியாதா?

சில வருஷங்களுக்குமுன்வரை இங்கிலாந்தில் விவாக ரத்து வழக்குவிவரங்கள் பத்திரிகைகளில் விரிவாக பிரசுரிக்கப்பட்டுவந்தன. சில பத்திரிகைகள் இத்தகைய நடவடிக்கைகளை வெளியிடுவதையே தங்களுடைய முக்கிய நோக்கமாகவும் செய்துகொண்டன. இது வரவர முற்றிவந்தது. கடைசியாக சென்னையின் மாஜி கவர்னர் ஒருவரின் பிள்ளை சம்பந்தப்பட்டிருந்த விவாகரத்து வழக்கின் முழு விபரங்களும் பத்திரிகைகளில் வெளியானபிறகுதான் பலருக்கும் இதை அனுமதிப்பதன் தவறு புலப்படலாயிற்று. இனி இதற்கு ஒரு தடை ஏற்படுத்தவேண்டுமென்று அவர்கள் கிளர்ச்சிசெய்யலாயினர். 1926-ம் வருஷம் இங்கிலாந்தில்

இயற்றிவைக்கப்பட்ட சட்டம் இந்தக் கிளர்ச்சியின் பலனே யாகும். விவாகரத்து சர்வசாதாரணமாகவுள்ள மேல்நாடு களிலேயே இவைகளின் நடவடிக்கை விவரங்கள் வெளியா வதைப் பொதுஜனங்கள் சகித்துக் கொள்ளக்கூடவில்லை யெனில், விவாகம் ஒரு புனிதமான காரியமாகக் கருதப்படும் இந்தியாபோன்ற தேசங்களில் ஜனங்களுக்கு இவ்வித நட வடிக்கைகள் வெளியாவது எத்தனை அருவருப்பை உண்டு பண்ணுமென்பதை நாம் சொல்லத்தேவையில்லை.

இப்பால் 1934-ம் வருஷம் இலங்கையில் ஒரு பிரபல விவாகரத்து வழக்கின் நடவடிக்கைகளை பத்திரிகைகள் மிக வும் விரிவாகப் பிரசுரம் செய்தன. இத்தகைய நடவடிக்கை கள் வெளியாவதில் திருப்திப்படுகிறவர்கள் ஒருசிலர் இருக் கலாம். ஆனால் சன்மார்க்க நெறியைப் பாதுகாப்பதில் சிரத் தையுள்ள எல்லாரும் இவ்விதம் பத்திரிகைகளில் முழு விப ரங்களும் வெளியாவதில் மிகுந்த அருவருப்படைவார்க ளென்பதில் சந்தேகமில்லை. பொதுஜன ஒழுங்கை உத்தே சித்து விவாகரத்து சம்பந்தமான கோர்ட்டு நடவடிக்கைகளை பத்திரிகைகளில் பிரசுரிக்கக்கூடதென்றும் இங்கிலாந்தில் இருக்கிறபடி இதற்காக இலங்கையில் சட்டம் ஏற்படுத்த வேண்டுமென்றும் சிலோன் ஸ்திரீகள் ராஜீய சங்கத்தின் நிர்வாக சபை மிஸஸ் எப். பி. டிமெல் தலைமையில் ஒரு தீர் மானம் நிறைவேற்றிவைத்திருக்கிறது. இதற்குப் பொது வாக விசேஷ ஆதரவுகிடைக்குமென்பதில் சந்தேகமில்லை. சிலோன் ஸ்திரீகளுடைய கோரிக்கையை நாம் ஆதரிப்ப தோடு, இந்தியாவிலும் இவ்விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டிய காலம் வந்துவிட்டதென்று கருதுகிறோம்.

(தொடரும்)

# விதவையர்களின் வேண்டுதல்!

( புதுவை, R. S. ராஜலக்ஷிமி அம்மாள். )

[ பாதிராத்திரி வேளையில் — என்ற மெட்டு. ]

## கண்ணிகள்

பாரில் நாங்கள் படுந்துயரத்தை
பரமனே கண் பாராய் எங்களை
பாதுகாத்திட வாராய் செய்த
தீது போக்கியே சீராய் இந்த
சிறையை மீட்டியே விரைவிலே நாங்கள்
தேறும் மார்க்கத்தை கூறாய் (பா)

பேருலகில் விதவையென்றுமே
பேசுவார்களே ஏச்சு எங்கள்
சீரியநலம் போச்சு மிக்க
சிந்தை வாடவு மாச்சு தினம்
தெய்வமேயுனை கைதொழுதும் நீ
செப்பிடாத தேன் பேச்சு (பா)

பாவை நாங்கள் யிருப்பதா லிந்த
பாரிலே பூமி பாரம் எண்ணி
பார்த்திடி லோ வி சாரம் துயர்
தீர்த்திடவே ஆ தாரம் இன்றி
சீரியே தினம் சேரிலெங்களை
செய்குவாரே சம் மாரம் (பா)

சீர்திருத்த மறுமணம் செய்தால்
செகத்திலே துயர் போகும் எங்கள்
சிந்தையும் களிப் பாகும் என்றும்
தீமை நாடாது வகும் இந்து
தேசந்தன்னிலே யாவருமொன்றாய்
சேர்ந்துழைப்பது மாகும் (பா)

# சகோதரி உனக்கிது.

( நாகலிங்கம் )

சகோதரி! பெண்களெல்லாம் ஆண்களுக்கு அடிமைகள் என்ற பண்டைய அசட்டு வாதம் விண்ணோக்கிப் பறக்கின்றதைப் பார்த்தனையா? கல் என்றாலும் கணவன், புல் என்றாலும் புருஷன். அவன் இட்டதே சட்டம், வைத்ததே கட்டளை என்ற கற்பனைக் கதைகளெல்லாம் இப்போது உலகத்து நவீன சுழல் காற்றில் அகப்பட்டுத் தத்தளிப்பதைப் பார்த்தனையா? அடுப்பங்கரையே கைலாசம் — ஆம்படையானே சொர்க்கலோகம், கிணற்றுத்தவளைக்கு நாட்டு வளப்பமேன், என்ற சோம்பேறி வேதாந்தங்களெல்லாம் தவிடு பொடியாகி வருவதைப்பார்த்தனையா? உன்னையொத்த சகோதரிகள் மற்ற நாடுகளில் "சட்டங்கள் செய்வதும், பட்டங்கள் ஆள்வதும் பாரினிலே பெண்கள் செய்யவந்தோம்" என்று நமது நாட்டுக்கவியரசர் பாரதியார் பாடியதை அவர்கள் செய்கையில் காட்டிவருவதைக் காண்கிறாயா இல்லையா? ஆகாயவிமானப் பந்தயத்தில், அழகுப் போட்டி பந்தயத்தில், நீந்துப் பந்தயத்தில் போட்டிபோடுகிறார்கள். ரஷ்யாவிலும், ஆப்கானிஸ்தானத்திலும் பெண்கள் பொறுப்புள்ள பெரும்பதவிகளை வகித்து அரசாங்கத்தை நடத்தி வருகிறார்கள். துருக்கி வீர மணிகள் "எங்களுக்கு ராணுவப்பயிற்சி கொடுங்கள், நாங்கள் சண்டைக்கு சமயம் வரும்போது உதவுகிறோம்" என்று வீர கர்ஜனை செய்கிறார்கள் அவைகள் உன் காதுகளில் விழுகின்றனவா? "உங்கள் முகமூடிகளைக் கழற்றிஎறிந்து, நாகரீக மக்களைப்போல் சுதந்தரமாய் வாழ முற்படுங்கள்" என்று ஹிதோபதேசம் செய்த ஆப்கன் அரசி "சௌரீபா" சிம்மாசனம் துறந்தாரல்லவா? அதை நினைத்துப் பாருங்கள்.

சகோதரி! 'வெந்ததைத்தின்று விதிவந்தால் சாகலாம்,' என்ற மனோபாவத்தை விடு. ஆண்மைக்கும், அன்பிற்கும் வீரத்திற்கும் உறைவிடம் தாய். ஆகையால் உன்னிடம் வீரம் மிளிரவேண்டும், பகுத்தறிவு வளரவேண்டும். இவை எல்லாம் உனக்கு வேண்டற்பாலன. சகோதரி! உன் நிலையை நீயே உன்னிப்பார். இவையெல்லாம் மருந்திற்கேனும் உன்னிடத்தில் உண்டா என்பதை நன்கு யோசித்துப்பார். அதற்கு மாருக, உன்னிடம் பேடித்தனமும், அடிமைப்புத்தியும், மூடப் பழக்கவழக்கங்களும், குருட்டு நம்பிக்கைகளும் மலிந்து கிடக்கின்றன. உனக்கென்ன தெரியும்! ஒப்பாரிவைத்து அழத்தெரியும், தாலாட்டத்தெரியும், பிள்ளை பெற அரச மரத்தைச் சுற்றத்தெரியும், ஸ்தல யாத்திரை போகத்தெரியும், காணிக்கை பிரார்த்தனை செலுத்தத்தெரியும், மாடு, காக்கை, குருவிகளைக் கும்பிடத்தெரியும், திதி திவசம் கொடுக்கத் தெரியும், பேய் பிசாசுகளை நம்பத்தெரியும். இவைகள் தான் உனக்குத் தெரிந்தவை.

சகோதரி! இவைகளை ஒவ்வொன்ருய்ச் சொன்னாலும் உனக்கு ரோஷமில்லை, வெட்கமில்லை, அறிவில்லை. இவை காலத்திற்கு ஒத்தவையா? அறிவைத் தெளிவுபடுத்தி நன்ருய்ச் சிந்தித்துப்பார்.

உணர்ச்சியற்று, ஒளிமழுங்கி, பிணத்தைபொத்துவாழ்வதைவிட சாவது மேல். ஏன் இதைச் சொல்லுகிறேன்? ஆடவர் என்ருல் ஏன் பயப்படுகிருய்? அடக்கமும், மரியாதையும், கீழ்ப்படிதலும் வேண்டியது தான் - நியாயம் உள்ளளவும். அது தவறின் நீ உன் உணர்ச்சியைக் காட்டாவிடில் பிணத்துக்கொப்பாவாய். நேற்று உன் சகோதரி, கணவன் சொற் கேளாததற்காக அந்த ஆணவங்கொண்ட மனிதன் அவளது கால்களில் ஆணிகளை வைத்து அடித்தானும். இன்னொரு சகோதரியை பழுக்கக் காய்ச்சிய இரும்பினல்

சூடுகள் போட்டானாம். ஒருவன் தன் மனைவியின் நடத்தையில் சந்தேகங்கொண்டு அவளையும் குழந்தையையும் சித்ரவதை செய்தானாம். இது போன்ற சம்பவங்கள் தினசரி நடக்கின்றனவே. அவ்வேளையில் அவனை எதிர்க்க, கண்டிக்க அல்லது சண்டையிடத் துணிந்த பெண்மணி உண்டா? தேக பலமா வேண்டும்? இல்லை மனோ பலம் வேண்டும். உணர்ச்சி இவ்வளவுதான். அநியாயத்தை, அக்ரமத்தை கண்டிக்க யார்தான் முற்படமாட்டார்.

சகோதரி! ஆண்களைவிட பெண்கள் பலவீனர்கள் …ற கற்பனையை விடு. உணர்ச்சிதான் வேண்டும். …னா வலிமை தானாய் உண்டாகும். ஒரு ஆடவன் உன் …டம் துராக்கிருதமாய், அருவருப்பான வார்த்தைகளைச் சொல்லவந்தால் அவன் பற்கள் அந்த இடத்திலேயே விழும் ப… செய். 'என் வீட்டு ஆடவனிடம் சொல்லி உன்னை எ…ன செய்யச் சொல்லுகிறேன் பார்!'' என்பதை விடு. தனியாய் எப்போதும் போகத் தயங்காதே. ஆனால் போகும்போதெல்லாம் தற்காப்புக்காகவேனும் உன்னிடம் ஒரு கத்தி இருக்க வேண்டும்.

சகோதரி! ஒரு தேசமக்கள் வீரமும் ஆண்மையும் உள்ளவர்களாவதற்கு தாயே காரணம். அத்தகைய குணங்களுக்கு உறைவிடம் தாயே. ஆகையால் அடிமைப் புத்தியும், பேடித்தனமும் அறிவின்மையும் இல்லாது வாழவும், நியாயத்தை வரவேற்கவும், அநியாயத்தை, அக்ரமத்தைக் கண்டிக்கவும் ஒருபோதும் தயங்கலாகாது. உணர்ச்சியைப் பெருக்கு. எதற்கும் உணர்ச்சிதான் வேண்டும். உணர்ச்சி இன்றேல் நீ நடைப்பிணமாவாய். உணர்ச்சியிருந்தால்மட்டும் உன் குழந்தைகள் வீரர்களாவார்கள். சகோதரி! உன்சந்ததியார்கள் போற்றுவார்கள். நாடும் க்ஷேமம் அடையும்.

## அகத்தியர்

# குணவாகடம் 3000.

(சாமி, விருதை, சிவஞான யோகிகள்.)

(237-ம் பக்கத் தொடர்ச்சி)

சத்தமடா கருகுமென்று கேட்கும் மெத்தச்
சாதகமாய் நாடியது மெதுவாய்ப் போகும்
சித்தமுடன் கண்ணிரண்டும் உற்றுப் பார்த்து
சிறப்பான முகமதனில் கவலை கொள்ளும்
தத்துவத்தி னதிகமடா தணிந்து காணும்
தாளாத தால்வியர்வை கிளம்ப லுண்டு
உத்திரத்த வியாதியது நீங்கிப் போனல்
உரமதனில் கபம்நீங்கி வெளியாங் காணே. 64

வெளியாகு மிந்தநோய் தினமு மேனும்
விதிப்படியே வாரத்துக் கொருநா ளேனும்
வழியாக மாதத்துக் கொருக்கா லேனும்
வன்மையுடன் வருடத்திற் கொருக்கா லேனும்
தெளிவாகக் காணுமடா திரேகந் தன்னில்
தீங்கில்லை இதனுலே கண்டு கொள்வாய்
பழிப்பாக இத்துடனே வேறு நோயும்
பாரித்துக் கண்டாக்கால் இறப்பன் பாரே. (65)

இறக்காமல் பிழைத்திடவே மருந்து கேளாய்
என்மகனே முதலில் நீ வாந்திக்கீய்ந்து
மறக்காமல் மலத்தில்துர் மலத்தை நீக்கி
மருவியே புகைச்சுருட்டுக் கொள்ளச் செய்வாய்
துறக்காத மத்தனிலைச் சுருட்டுத் தந்தால்
தூலத்தின் ரோகந்தான் தவிர்ந்து போகும்
கறைக்காத வெடியுப்பைக் கறைத்து அப்பா
காகிதத்தில் நனைத்தப்பா காயப் போடே. (66)

(தொடரும்)

# மருந்து செய் பகுதி.

## உஷ்ணசாந்தி லேகியம்.

சுக்கு, மிளகு, சீரகம், சோம்பு, அதிமதுரம், கண்டங்கத்திரி, அக்கராகாரம், கோஷ்டம், சன்னலவங்கப் பட்டை, கசகசா, பூமிசர்க்கரைச்கிழங்கு, பொன்னாங்கண்ணி கரிப்பான் தழை, புளியாரை, கொத்தமல்லி, பேரிச்சம்பழம், முந்திரிப்பழம், கற்கண்டு வகைக்கு ரூபாயெடை 2-எடுத்து சட்டியிலிட்டு இளவறுப்புச்செய்து உரலிலிட்டு இடித்து வஸ்திரகாயம்செய்த சூரணத்தை எடுத்துக்கொண்டு, பசுவின் பால் படி $\frac{1}{4}$, வல்லாரைச்சாறு படி $\frac{1}{4}$, வெங்காயச்சாறு படி $\frac{1}{4}$ இவைகளை ஒன்றுசேர்த்து அதில் பனங்கருப்பட்டி ரூபாயெடை 24-சேர்த்துக் கரைத்து அடுப்பிலேற்றி பாகு செய்து ஷை சூரணத்தை அதில்போட்டு நெய்படி வீசம், தேன் படி வீசம் விட்டுபிசைந்து எடுத்துவைத்துக்கொள்ளவும்.

**அளவு:**— வேளைக்கு கொட்டைப்பாக்கு பிரமாணம் காலை மாலையாக நாள் ஒன்றுக்கு 2-வேளை வீதம் கொடுக்கவும்.

**உபயோகம்:**— தேக எரிவு, உஷ்ணம், அதிக தாகம், அஜீரணம், நீர்க்கடுப்பு குணமாகும். உடல் பலம் உண்டாகும்.

**பத்தியம்:**— சகலமும் சாப்பிடலாம்.

## கற்பூர சலாசத்து பஸ்பம்.

ஒருபலம் கற்பூரசலாசத்தை பசும்பாலில் வேகவைத்து அலம்பி எடுத்து, கருஞ்சுக்கட்டி இலையை அரைத்து அதன் மேல் கவசம் கட்டி சீலைமண்செய்து 50-எருவில் புடமிட்டு பவுடர் செய்து எடுத்துக்கொள்ளவும்.

**அளவு:**— வேளைக்கு 4-குன்றிமணியெடை வீதம் காலைமாலையாக நாள் ஒன்றுக்கு 2-வேளை வீதம் கொடுக்கவும்.

**அனுபானம்:**— நெய் அல்லது தேன்.

**உபயோகம்:**— நீர் எரிவு, கண் எரிச்சல், நாவரட்சி, இருமல் நீங்கும். ஷை பஸ்பத்தை முருகப்பட்டைச் சாற்றில் குழைத்து, நீர்கனத்தினாலுண்டான தலைவலிக்குப்

போடலாம். நெய்யில் குழைத்துத்தடவ உஷ்ணத்தினு லுண்டான தலைவலி நீங்கும்.

பத்தியம்; புளி நீக்கவும்.

## இஞ்சி மாத்திரை.

தோல்சீவிய இஞ்சி, சீரகம், ஓமம், சுக்கு, இந்துப்பு, வகைக்கு ரூபாயெடை 3, பெருங்காயம் ரூபாயெடை $\frac{3}{4}$, சாதிலிங்கம் ரூபாயெடை $\frac{1}{4}$, இவைகளை எலுமிச்சம் பழச் சாறுவிட்டு அரைத்து சிறு சுண்டக்காய் அளவு மாத்திரை செய்து வைத்துக்கொள்ளவும்.

அளவு:- வேளைக்கு ஒரு மாத்திரைவீதம் காலை மாலையாக நாளொன்றுக்கு 2-வேளைவீதம் வாயில்போட்டு சாப்பிடவும்

உபயோகம்:- வாய்வு, அஜீரணம், பித்தம் புளியேப்பம், முதலியன குணமாகும்.

பத்தியம்:- இல்லை.

## காதுவலித் தைலம்.

தேங்காய் எண்ணெய் $\frac{1}{4}$-படி சட்டியில்விட்டு வில்வப் பழம் 4-எடுத்து உள்ளிருக்கும் சதையை அதனுடன் சேர்த் துக்காய்ச்ச கொட்டை வெடிக்கும் சமயத்தில் இறக்கி வடி கட்டி வைத்துக்கொள்ளவும்.

அளவு:— காதில் 10-துளிகள் விட்டு பஞ்சுவைத்து அடைக்கவும்.

உபயோகம்:— காதுவலி, காதில் சீழ்வடிதல், காத டைப்பு குணமாகும்.

(N.B.) ஸ்நானத்தைலமாகவும் உபயோகிக்கலாம்.

## வாசனை சுண்ணாம்பு.

சுண்ணாம்புக்கல் அல்லது கிளிஞ்சலை இளநீர் விட்டு வடிகட்டி இறுகிய பதத்தில் பச்சைக்கல்பூரம், குங்குமப்பூ, பன்னீர், கலந்து டப்பிகளில் அடக்கம்செய்து வைத்துக் கொள்ளவும்.

# மூலிகைப் பகுதி.

## துளசி.

இதைப்பற்றி யாவரும் எளிதில் அறிவர். இதன் உபயோகம் பலவாக இருப்பினும் வைத்தியசம்பந்தமாக இதன் உபயோகம் கீழ்வருமாறு.

"ஐயம் வயிறுளைச்ச லஸ்திசுரந் தாகமும்போம்
பையசுரமாந்தம் பறக்குங்காண் — மெய்யா
வாயின ரோசகம் போம் வன்காரஞ் சூடுள்ள
தூயதுளசிதனைச் சொல்".

(பதார்த்தகுணசிந்தாமணி)

துளசியால் கபதோஷம், வயிற்றுளைச்சல், அஸ்திசுரம், தாகம், அரோசிகம், மாந்தம் இவை குணமாகும்.

மலேரியா வியாதியுள்ளவர்கள் துளசி, நிலவேம்பு, மிளகு வகைக்கு ரூபாயெடை எடுத்து $\frac{1}{2}$-படி தண்ணீர் விட்டு, $\frac{1}{8}$-படியாக வற்றவைத்து வேளைக்கு வீசம்படி சாப்பிடுவார்களானால் அந்நோய் குணமாகும்.

காய்ந்துலர்ந்த துளசி இலைகளைப்பொடிசெய்து மூக்குத்தூளாய் உபயோகிக்க பீனிசம் நீங்கும். காதுக்குத்தினால் வருந்துவோர் தேங்காயெண்ணெயில் துளசியைப்போட்டுக் காய்ச்சி சூடு தணிந்தபின் காதில் விட வலி தீரும்.

பாம்பு கடித்த இடத்தில் துளசி வேரை வெண்ணெயுடன் சேர்த்து அரைத்து தீண்டிய இடத்திற்பூசவேண்டும். வெண்மை நிறமுள்ள அப்பசை நீல நிறமானவுடன் அதனை அகற்றி மீண்டும் அதேயிடத்தில் துளசிவேர்ப்பசை முன் சொன்னபடி அரைத்துப் பூசவேண்டும். இப்படியே செய்துவர நஞ்சு முழுவதும் பசையின் மூலமாக வெளி வரும்.

துளசி, கண்டங்கத்திரி இவைகளின்சாற்றை குழந்தைகளுக்குவரும் இருமல், சளி நீங்க உபயோகிக்கலாம். இவற்றோடு சி. எம். சாமி பாலகுடோரிக் குளிகையை சேர்த்துக் கொடுத்தால் எப்படிப்பட்ட கபரோகமும் எளிதில் குணமாகும்.

272-ம் பக்கத் தொடர்ச்சி

எனக்கூறியது இங்கு நோக்கத்தக்கது. அன்றுதான் இருள் ஒழியும். அருள் சூழும். திருமகளும் கலைமகளுடன் உறவு கொண்டாடுவாள். வறுமைப்பிணி போம். நாடும் பொன்னுடாய்த் திகழும். இந்தியரும் மேனாட்டாரின் புகழுக்கருகராவர்.

இரண்டாவதாக மனிதன் தான் தான்போன்றபலருள் ஒருவன் என்பதை உணரவேண்டும். தான் சுகித்தல் மற்றோர் சுகித்தலையே பொறுத்தே இருக்கிறது. ஆதலால் தன்னை சமுகத்தில் ஒருவனுகக்கருதி ஒற்றுமையையும் உழைப்பையும் கைக்கொள்ளவேண்டும். இதற்குத் தான் என்பதும் தனது என்பதும் சமூகம் இல்லாவிடின் இல்லை என்றும், உளதெனின் உண்டென்றும் உணரவேண்டும். எவ்வாறு ஒருசங்கிலியின் வலிவிற்குப்பல சிறுவளையங்களும் ஒன்றுக்கொன்று வலிவு குறைவில்லாத வலியுடையதாய் இருத்தல் இன்றியமையாததோ அவ்வாறே சமூகமேம்பாட்டிற்கும் ஒவ்வொரு தனிமனிதனும் ஏற்ற அறிவும் வளர்ச்சியும் பெற்றிருக்கவேண்டும். மூடப்பழக்கவழக்கங்கள் ஒழியவேண்டும். பரந்த நோக்கங்கள் பரவவேண்டும். இஃதளிக்கும் கல்வியே இன்று நம் நாட்டில் வேண்டப்படுவது.

வழிகள்:—

1. நகரங்களில் கல்வி கற்கும் இளைஞர் கிராம வாழ்க்கையை மேற்கொண்டு தாம் கற்ற கல்வியை கிராம மக்களிடையே பரப்ப முயலவேண்டும்.

2. கிராமங்களில் வாலிப சங்கங்கள் ஏற்படுத்த வேண்டும். கிராமப் புனருத்தாரண வேலையில் உழைத்து வருபவரும் மக்களின் கல்வி எங்கும் பரவ பாடுபடும் பெரியார் ஒருவர் "வாலிபர்களாலேயே ஒவ்வொரு கிராமத்திலும் நாகரீக வாழ்க்கை பரவவேண்டும். சமூக நன்மையான விஷயங்களில் ஈடுபட்டு கூலியில்லாமல் வேலைசெய்யும் மனப்பான்மை ஏற்படவேண்டும். சமூக விஷயங்களைத் தெரிந்துகொள்ள பத்திரிகைகளும் புஸ்தகங்களும் வாங்குவதற்காக வாசகசாலைகள் வேண்டும்" எனக்கூறியுள்ளது என் மனத்தே பசுமரத்தாணியென பதிந்துள்ளது. (தொடரும்)

# நாடகப் பகுதி.

## நாகானந்தன்.

(லேட் H. ராமசாமி அய்யர் அவர்களால் எழுதப்பட்டது)

(244-ம் பக்கத்தொடர்ச்சி.)

அங்கம் 2] [களம் 4

வரகுணவழுதி, சுகுணசுந்தரி, முத்துமாலை, மோகனமாலை.

காலம்—மாலை.

இடம்—உத்தியானவனம்.

சுகுணசுந்தரி:—தாத்தா! இன்று தங்களை ஒரு விஷயம் வினவ ஆவல்கொண்டேன். அதனைச்சொல்வதற்கு தங்கள் திருவுள்ளத்தில் இச்சை உண்டாகுமா?

வரகுணன்.— குழந்தாய்! சுகுணசுந்தரி! உன்னையன்றி எங்கள் குலம் விளங்கவந்துள செல்வம் வேறுளதோ? ஆதலின் உன் மனம் மகிழ்விப்பதைவிட எனக்கேனும் சுகுணனுக்கேனும் வேறு கர்மமும் உளதோ? நீ கேட்க விரும்பும் விஷயம் யாது? வினவுக. யான் அறிந்தவளவு ஒளியாது உரைப்பேன்.

சுகுணசுந்தரி:— தாத்தா! உங்கள்பால் அடைக்கலமாய் வந்தடைந்தோரை விடுக்க, அன்றேல் போர் கொடுக்க என சோணாட்டரசன் விடுத்த தூதுகாரணமாய் அவன் நாடு படையெடுத்து ஏகிய நம் சேனையின் செயலென்னாயிற்று.

வரகுணன்:— பாண்டியர் குலவிளக்கே! இயம்புவேன் கேள். நமது சேனாசமுத்திரம் நாகானந்தராகிய பிரதம சேனாதிபதியாலும், சுந்திரகுமாரன், வீரகேசரி, பிரதாபருத்திரன் ஆகிய உபசேனாதிபதிகளாலும் நடத்தப்பெற்று, உறையூர், திருசிரபுரம், கும்பகோணம், மயூரம் முதலிய

திருநகரங்களைக்கைப்பற்றி, ஆங்காங்கு நமது மீனக்கொடியினை நாட்டி, உள்நாட்டுக் கலகங்களை ஒட்டி, கோல்கோடா ஆக்ஷியினைமாற்றி, பின்னர் காவிரிப்பட்டிணம் போயது. அங்கு பெரும் சேனையுடன் ராஜகேசரியெனும் சோழன் நம் சேனையின் படையெழுச்சியை தடுப்பான் பாளையமிறங்கி இருந்தனன். நமது சேனை சமீபிக்கவே சோழனாலேயே நடத்தப்பெற்ற அவன் சேனை எதிர்வந்து போர் தந்தது. அந்த யுத்தத்தில் கை கால் தலையாதி அவயவமிழந்தோர்க் களவில்லை. அத்தினம் நாய், நரி, கழுகு முதலிய மாமிச பக்ஷிணிகளுக்கு பெரும் விருந்து தினமாயது. இரவில் பேயும் பூதமும் பிரேதங்களைத் தின்று களிக்கூத்தாடின. இவ்வாறு ஜெயாபஜெயம் இருதிறத்தார்க்குமிலது கடும் போர் நடந்தது. ஒன்பதாம் நாள் சோழன் சேனை ஒருங்கே புறமுதுகிட்டு கோட்டையுள் புக ஆரம்பித்தது. சைன்யமெல்லாம் உட்புகின் பன்னாள் கோட்டையை முற்றுகையிடவேண்டி வருமெனக் கருதி நமது உபசேனாதிபதி சுந்திரகுமாரர் சேனையின் ஓர் பகுதியுடன் வலபாரிசமும், வீரகேசரி இடபாரிசமும், பிரதாபருத்திரர் நேர்முகமும் நின்று தாக்கினர். நாகானந்தர் எப்பாரிசமும் சென்று எல்லோருக்கும் போரினில் உற்சாகத்தையூட்டினர். இவ்வாறு தாக்கப்பட்ட சோழன் சேனை மிக்கத்திண்டாட்டத்திற்குள்ளாயது. சோழன் சொற்ப சேனையுடன் கோட்டைபுக சுந்திரகுமாரன் எதிரிகளின் அணிவகுப்பைப் பிளந்துகொண்டு தன் சேனாபலத்துடன் அதனுட்புகுந்தனன். இருவருக்கும் கடும்போர் நடந்தது. கடையே சுந்திரகுமாரன் தோல்வியுற்று சோழனால் சிறையாக்கப்பட்டனன். சுந்திரகுமாரன் கோட்டைக்குட்புகுந்ததறிந்த நாகானந்தர் வீராவேசத்துடன் சத்துரு சேனைகளை முறியடித்துத் தள்ளிக்கொண்டே வீரகேசரி, பிரதாபருத்திரர்சகிதம் சேனையோடு கோட்டையினுள் புகுந்து சோழனை எதிர்த்து முறியடித்து அவனைச்சிறையாக்கி சுந்திரகுமாரனையும் சிறைமீட்டினன். பின்னர் பிரதாபருத்திரரை சோணாட்டின் இராஜப்பிரதிநிதியாக்கி வேண்டுமளவு சேனையையங்கு விடுத்து எல்லவரும் நம்நாடுநோக்கி வருகின்றனர், இதுவே யுத்தத்தின் விருத்தாந்தம்.

சுகுணசுந்தரி;— தாத்தா! சுந்திரகுமாரரை கொலைபுரியாது இராஜகேசரி சிறையாக்கியது நல்வேளைதான். கொலை புரிந்திருப்பின் நம் எல்லவருக்கும் பெருந்துக்கமன்றோ சம்பவித்திருக்கும்.

வரகுணன்;— குழந்தாய்! அபஜெயம் அடைவன் என்றுணர்ந்த இராஜகேசரி அத்தொழில் செய்வனோ! செய்திருப்பின் அவன் கதியும் அவ்வாறேயன்றோ ஆயிருக்கும்.

முத்துமாலை:— அம்மணி! சுந்திரகுமாரர் போருக்கே போயிருக்கவேண்டாம். அப்படித்தான் போனாரே பிராணபாயம் வரும்வண்ணம் தன்னந்தனியே கோட்டையுட்புக வேண்டுமா? இராஜகேசரியால் சிறையாகவேண்டுமா?

மோகனமாலை:—அடி! அவர் உபசேனாதிபதியாய்ப் போருக்குச்சென்றதும், கோட்டை புகுந்து இராஜசேசரியுடன் போர் புரிந்ததும், நம்மிளவரசியார் நன்மதிப்பும், காதலும் பெறவன்றோ! தெய்வம் அவர் பங்கிலில்லை. அவர் ஒன்று நினைக்க அது ஒன்று ஆக்கிவிட்டது! என் செய்வது! ஐயே பாவம்! அவர் சிறையாயிருக்கவும் வேண்டாம்; அதிலும் நாகானந்தரால் சிறைமீட்கப்பட்டிருக்கவும் வேண்டாம். இதனால் அவர் பல்லோர் நகைப்பிற்கிடமானதுதான் மிச்சம்.

முத்துமாலை:— அடி! தோழி! என்னடி! நீ அவர் வெற்றிகருதிச் செய்த காரியத்திற்கு ஒரு காரணங்காட்டி அவருக்கு சின்னத்தனமும் வருவிக்கின்றாய். அது அழகு அல்லவே.

மோகனமாலை: அம்ம! பிரதி க்ஷத்திரியரும் போருக்குப்போதல் தர்மம். தீர்க்க புத்தியின்றி தனியே கோட்டை புகலாமா? சிறையாகலாமா? இதுவெல்லாம் சின்னத்தனமல்லவா? நான் எடுத்துக்காட்டியதுதானா அழகில்லாது போயிற்று.

முத்துமாலை:— தோழீ! அவர் யுத்தப்பயிற்சி உள்ளவரேயொழிய அதில் அனுபவமில்லாதவர். அதுபற்றித் தனியே கோட்டையுள் புகுவதால் ஏற்படும் பலன் உணர்ந்தாரில்லைபோலும்.

(தொடரும்)

18992

# பூபதி செந்தூரம்.

இதை உட்கொண்டால் ஜுரம், ஜன்னி, வாந்திபேதி வயிற்றுப்போக்கு, மகமாரி (பிளேக்) பித்தம், கிறுகிறுப்பு, சூலை, குன்மம், சுவாசகாசம், கபம், வாதம், உடல் வலி, பொருமல், அண்ட வாய்வு, சூதக வாய்வு, பக்கவாதம் முதலிய நோய்கள் தீருவதோடு பிள்ளைபெற்ற பெண்களுக்குண்டாகும் எல்லா நோய்களும், குழந்தைகளுக்கு உண்டாகும் மாந்தங்கள், தோஷங்கள், ஜுரம், ஜன்னி, இருமல் முதலிய சகல நோய்களும குணமாகும்.

தோலா 1-க்கு விலை ரூ. 4—0—0.

தோலா $\frac{1}{4}$-க்கு விலை ரூ. 1—0—0.

(தபால் சார்ஜ் வேறு)

**சாமி, விருதை, சிவஞான யோகிகள்**
சிவஞான சித்த பார்மஸி, கோவிற்பட்டி.

---

தமிழ் பிரமசூத்திர ஆசிரியர்,
சாமி, விருதை, சிவஞான யோகிகளால்
வெளியிடப்பட்ட புத்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | தேவோபாச ஞதீபம் (விக்கிரகாராதன விளக்கம்) | 0— 8—0 |
| 2. | விபூதி ருத்திராக்ஷதாரண நிருபணம் | 0—14—0 |
| 3. | வேதாகம உண்மை | 0— 1—0 |
| 4. | சிவஞானபோத வினாவிடை | 0— 8—0 |
| 5. | கோவிற்புரி புராணம் | 1— 0—0 |

கிடைக்குமிடம்:—

**சாமி, விருதை, சிவஞானயோகிகள்**
கோவிற்பட்டி.

# கட்டுரை எழுதுவோர்

## கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

1. விஷயங்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில் சுத்தமாக மையினல் எழுதப்படவேண்டும். சித்தனில் மூன்று அல்லது நான்கு பக்கங்களுக்குள் அடங்கக்கூடிய விஷயங்கள் முதன்மையாகக் கவனிக்கப்படும்.

2. பிரதி ஆங்கில மாதம் பத்தாம் தேதி பத்திரிகை வெளிவரும். ஆசிரியரால் அங்கீகரிக்கப்படும் கட்டுரைகள் மட்டும் பிரசுரிக்கப்படும்.

3. சித்தனில் பிரசுரமாகும் எல்லா விஷயங்களின் காபிரைட் பிரசுரம் செய்வோர்க்கே உரிமையாகும்.

4. கட்டுரையாளர்களின் கருத்துகளுக்கும், அபிப்பிராயங்களுக்கும் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியாகார்.

5. நம்பி பிரசுரிக்கும் கட்டுரைகள் ஏற்கனவே உரிமையாக்கப்பட்டிருந்தால் அதற்குப் பத்திரிகாசிரியர் உத்தரவாதியன்று.

6. கட்டுரைகளை கூட்டவும், குறைக்கவும், ஏற்றுக்கொள்ள மறுக்கவும் பத்திரிகாசிரியருக்கு அதிகாரமுண்டு

7. அங்கீகரிக்கப்படாத கட்டுரைகளை திருப்பி அனுப்புவதாக உறுதி கூற முடியாது. தபால் தலை அனுப்பினல் மட்டும் திருப்பி அனுப்பப்படும்.


### ஏஜண்டுகள் தேவை.

எமது பத்திரிகைகளை விற்பதற்கு எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை. விபரதிற்கு எழுதவும்.



விலாசம்:— மானேஜர்,

சித்தன்,

பழனி S. I.

Regd. No. M. 3210.

# மாதர் பூஷணம்!

போன்றது.

பெண்மக்களின் துயரத்தைப் போக்குவது
கர்ப்ப எண்ணெயே.

எவ்வித மனக்கவலையையும் மாற்றி
சந்தோஷத்தையும் திரேக
சுகத்தையும் கொடுக்கும்.



ஒவ்வொரு ஸ்திரீகளிடத்திலும் ஒரு
புட்டி இருக்கவேண்டியது
அவசியத்திலும் அவசியமே.

மாதாந்தர காலத்திலுண்டாகும் வயிற்றுவலியை
உடனே நிறுத்தும் சரியாய்ப்பகிஷ்டையாகும்.
கேர்ப்பாசயம், சினைப்பையிலுள்ள கெடுதல் நீங்கும்.
புட்டி 1-க்கு விலை ரூ **2** (தபால் சார்ஜ் வேறு.)

## மலையப்பசாமி வைத்தியசாலை,

பிராஞ்சு:- 1-54, அருணாசல நாயக்கன் தெரு,
சிந்தாத்திரிப்பேட்டை, மதராஸ்.

Edited, Printed & Published by Dr. C. P. Sami
at the Nityananda Press, Palni.